# இன்பத்துள் இன்பம்

MADURAI UNIVERSITY LIBRARY,
MADURAI-2.

வே. கபிலன்

48
மதுரை-1.

யம்

அருணோதயம் வெளியீடு: 40.
முதற் பதிப்பு : டிசம்பர், 1957
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1964

98

விலை ரூ. 1·50

Copyright of this book belongs to:
ARUNOTHAYAM
Rayappettai—Madras-1

மா

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன்,
எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.,

# முன்னுரை

ஆர்வமும் துடிதுடிப்பும் நிறைந்த இளமையுலகில் ஆக்கத் தொண்டில் முனைந்த திறனுடையோர் ஒருசிலரே. 'இன்பத்துள் இன்பம்' என்ற இந்த நூலின் ஆசிரியர் திருவாளர் வே. கபிலர் அந்த ஒரு சிலருள் குறிக்கத்தக்கவராவர். 'மலர்' என்ற திங்களிதழ் நடத்தி, அதன் ஆசிரியராக விளங்கி நற்றொண்டு புரிந்தவர். தமிழினமும் தமிழும் வாழவேண்டும் என்னும் குறிக்கோளுடன் எழுத்துத் தொண்டு புரிந்து வருபவர். 'மலர்' இதழில் அவ்வப்போது வெளிவந்த சில கட்டுரைகளையும், பின்னர் எழுதிய வேறு சில கட்டுரைகளையும் சேர்த்து, 'இன்பத்துள் இன்பம்' என்ற இந்நூலில் தொகுத்துத் தந்துள்ளார். இத்தகைய தொண்டு வரவேற்கத் தக்கது. வெல்க இந்நூலாசிரியரின் முயற்சி.

சென்னை-30
3—12—57.

மு. வரதராசன்

# பாராட்டுரை

இன்பத்துள் இன்பம் இலக்கியத்தாற் பெறும் இன்பமே. அப் பேரின்பத்தைப் பெற நண்பர் வே. கபிலன் அவர்கள் வழி வகுத்திருக் கின்றார். பண்டைத் தமிழரின் வாழ்வியல், மன வியல் ஆகியவற்றை உரைப்பதன் மூலம் பழந் தமிழகத்தை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றார் நண்பர். சுவை மிகுந்த செய் யுட்கள் பல ஆங்காங்கே நின்று தமிழரின் வரலாற்றைக் கற்கின்றோமென்னும் உணர்வை மறக்கச் செய்து, இலக்கியச் சுவையுணர்வை யூட்டுகின்றன.

நடை ஆற்றொழுக்கான நடை. ஆசிரியரின் தமிழார்வமும் உணர்பும் அதனைச் சிறப்புச் செய்வதால் இதனைக் கற்போரும் அவற்றைப் பெறுவர் என்பது உறுதி.

பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களை இம் முறையில் வெளியிடும் நூல்கள் நிரம்பத் தேவை. ஆசிரியர் கபிலன் அவர்கள் இம் முயற் சிக்குப் பெருந்துணையாக அமைவாராக.

ம. இராசமாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர்
சர். தியாகராயர் கல்லூரி, சென்னை.

MADURAI UNIVERSITY LIBRARY.
MADURAI-2.

# இன்பத்துள் இன்பம்

## கண்டதைக் காணுவோம்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்றார், நம்மிடையே வாழ்ந்து, சுதந்திரத் தாகத்தை உண்டாக்கி, நாமெல்லாம் ஒன்றுபட்டு வாழவேண்டுமெனக் கருதிய பாரதியார். காலம்—நம்மிடத்திலிருந்து அவரைப் பிரித்துக் கொண்டுபோய்விட்டது. ஆயினும், அவரது அறிவுச் சுடரிலிருந்து கிளம்பிய கருத்துக்கள் நம் அகத்திலே பதிந்துவிட்டன.

ஆம்! செந்தமிழ் நாடென்று எண்ணுகின்ற வேளையிலே எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னே சென்று விடுகின்றோம். எதைக் கண்டு பாரதியார், 'இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்றாரோ அங்கேயே நாம் சென்றுவிட்டோம். அந்த இடத்திலிருந்து மறுமுறையும் இங்கு வருவோம். உணர்வு பெறுவோம்; ஒன்று சேருவோம்; ஒருவரையொருவர் இழித்தும் பழித்தும் பேசுவதை ஒழிப்போம்; ஒன்றுபட்டு வாழ்வதே உயர்ந்தது என்பதை அறிந்து அதன்படி நடப்போம். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றை ஒழித்து, அறத்தை—அன்பை—பண்பைக் காக்க முற்படுவோம். பாரதியார் கண்டதை, அவர் துணைக்கொண்டே நாமும் காணுவோம். வாருங்கள், அந்தக் கனவு உலகிற்கு.

# அமைப்பும் ஆட்சியும்

## தொல்காப்பியர் கண்ட தமிழகம்

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்த நம் முதுபெரும் புலவரான தொல்காப்பியர் இத் தமிழகத்திற்குள்ள எல்லையினை,

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து —தொல். சிறப்.

எனக் கூறிப் போந்தனர். வடக்கே வேங்கடமலைத் தொடரையும் தெற்கேயுள்ள குமரியாற்றையும், மேற்கேயுள்ள கடலையும், கிழக்கே அமைந்த கடலையும் தமிழகத்தின் எல்லையாக வகுத்தார். வயலுக்கு வேலி கட்டுவதைப் போல தமிழகத்திற்கு எல்லையென்னும் வேலியைக் கட்டினர். அவ்வெல்லையில் வாழ்வது தமிழ்—தமிழ் பேசும் மக்கள். இதையேதான் பின்வந்த நூல்களிலும்,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பவ்வத்தின் குடக்கும்

—புறநானூறு-6.

என்றும்,

தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை —மதுரைக் காஞ்சி. 70

என்றும் தமிழகத்தின் எல்லைகள் குறிப்பிடப்படுகின்றன. இந்த எல்லைக்கு உட்பட்டார்கள் பேசும் மொழி தமிழ் மொழி. அதன் விளைவாகவே தமிழர் என்ற காரணப் பெயர் வழங்கலாயிற்று. இருபதாம் நூற்றாண்டு இயற் றமிழ்ப் புலவரான சுப்பிரமணிய பாரதியாரும்,

நீலத்திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

எனக் கூறிப் போந்தார்.

எல்லை வகுத்த தொல்காப்பியர், அவ்வெல்லைக்குள் வாழ்கின்ற தமிழர்தம் ஒழுக்க அமைப்புகளைக் காண்பதற்கு வருகிறார். மலைச்சரிவுகளையும் மலைக்குகைகளையும் ஒரு காலத்தில் தம் சொந்த இடமாகக் கொண்டிருந்த மக்கள், உணர்வு பெற்றுத் தம்மைச் செப்பனிட்டுக் கொண்ட பின்னரே இவ்வெல்லைக் கோட்பாடு ஏற்பட்டது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். அதன் பயனாகத்தான் நானிலத்தை வகுக்கிறார், தொல்காப்பியர்.

நாகரிகத் தொடக்கம்

ஒரு வரம்பின்றித் திரிந்திருந்த மக்கள், சில ஆண்டுகட்குப் பின்னர் ஒவ்வோரிடத்திலும் நிலைத்துத் தமக்கென ஒரு வழியை வகுத்துக் கொள்ளலாயினர். அதன் பிறகுதான் தம்மைத் தாமே உணர்ந்து பார்க்கத் தொடங்கிய பின்னர்தான்—நாகரிகத் தொடக்கம் ஏற்பட்டது. அங்ஙனம் உணர்ந்து பார்த்துத் தம்மைத்தாமே செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்த பின்னர்தான் நகர்கள் தோன்றலாயின. நகர வாழ்வின் பண்பட்ட நிலையே நாகரிகமெனப்படும். நாகரிகம் என்ற சொல்லைத்தான், 'சிவிலிசேஷன்' என்று மேனாட்டார் ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். *இந்நகரத்தில் விற்பனையாகும் பொருள்களனைத்தும் நாட்டுப்புறங்களில் பயிராக்கப்படும் செல்வமேயாகும். பல்வேறு நாட்டிலிருந்து வரு

---

*Culture suggests agriculture, but civilization suggests the city. In one aspect civilation is the habit of civility and civility is the refinement wich townsmen, who made the world throught possible in the civitas or city. —The Story of Civilization—P. 2. Will-Durant.

கின்ற வணிகர்கள் கூடும் நகரத்தில் புதுமையைத் தோற்று வித்தலும், தொழில்கள் பல தோன்றுவதும், பொழுது போக்கிற்கான வாய்ப்புக்களும், பண்டங்கள், பொருள் கள், எண்ணங்கள் முதலியவற்ருல் விவேகம், திறமை மிளிரும். அதன் துணைக்கொண்டு கைத்தொழில் செய்ய நகரிலே சிலரை நியமிப்பர். அதன் பயனுகப் பண்பட்ட முறை ஏற்படுகின்றது. அதுவே நாகரிகம் என்ற பெயரை அடைகின்றது. நாகரிகம் என்பது, குடிசையில் முளைத்து நகர்ப் புறத்திலே மலர்ந்து பண்பட்ட ஒரு நிலையைப் பெறுகின்றது. இங்ஙனந்தான் முதன் முதல் நாகரிகம வளர்ந்தது, நமது தாயகத்தில்! அதன் பின்னரே வேற்று நாடுகளிலும் இம்முறை பரவலாயிற்று.

## நால்வகை நிலவொழுக்கம்

இங்ஙனம் பண்பட்ட பின்னரே அவரவர்கள் வாழும் இடத்திற்கேற்ப வாழ்க்கை மாறுபட்டது. அவ்விதம் மாறுபடும்போது தொழில் துறைகளும் முறைகளும் வெவ்வேறு ஆயின. இதைத்தான் தொல்காப்பியர் கண்டார். தமிழ் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையாகப் பகுத்தார். மலையும் மலையைச் சார்ந்த இடத்தைக் குறிஞ்சியாகவும், காடும் காடு சார்ந்த இடத்தை முல்லையாகவும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதமாகவும், கடலும், கடலைச் சார்ந்த இடத்தை நெய்தலாகவும், நீரும் நிழலுமற்ற வறண்ட மணற்பாங்கை பாலையெனவும் பிரித்தார். அதோடு, அந்தந்த இடத்தில் தோன்றுகின்ற பொருளையே அதற்குப் பெயராகச் சூட்டினர். குறிஞ்சி என்ற மலர் மிகுந்திருக்கும் மலைப் பகுதியாகையால் குறிஞ்சி யென்றும், காட்டைச் சூழ்ந்து முல்லை மலரின் மணம் மிகுந்திருப்பதால் முல்லையென்றும், மருதம் என்கின்ற மரங்கள் நிறைய இருப்பதால் அதற்கு மருதமென்றும், நெய்தல் என்ற ஒருவகையான கொடிகள் அக்கடற்கரை யைச் சார்ந்து நிறைந்து காணப்படுவதால் அதற்கு நெய்தலெனவும், வறண்ட மணற்பகுதியைப் பாலையென வும் பெயர் வைத்தார். இதனையே ஐந்திணை என்பர்,

## நிலத்திலே தொழில்வகை

மலைகளில் வாழ்கின்ற விலங்கினங்களை வேட்டை யாடியும் தினை முதலியவற்றைப் பயிரிட்டும் வாழ்ந்த வர்கள் குறவர் என்ற பெயர் பெற்றனர். வரகு என்கின்ற தானியங்களைப் பயிர் செய்தும் பசுநிரைகளை மேய்த்தும் வாழ்ந்த முல்லை நிலமக்கள் ஆயரென்ற பெயரினை அடைந்தனர். இவ்விரு நிலமக்களைக் காட்டி லும் உயர்ந்து நிற்பவர்கள் மருத நிலத்தவரேயாவர். அவர்கள் தான் காட்டை அழித்துத் திருத்தி, குளங்களைப் புதுப்பித்து, நிலத்தைச் செப்பனிட்டு, நீர் பாய்ச்சி, நெல் முதலியவற்றைப் பயிர் செய்து, அரசியலமைப்பைத் தோற்றுவித்துக் கொண்டு வாழ்ந்தார்கள்; இவர்கள் உழவர்கள். கடற்கரையடுத்து வீடு கட்டிக்கொண்டு, கடலில் படகுகளைச் செலுத்தி, வலை வீசி, மீன் பிடித்து, உப்பு விளைத்து விலைக்கு விற்று வாழ்ந்தவர் நெய்தல் நில மக்களெனப்படுவர்; இவர்களுக்குப் பரதவர் என்ற பெயர் வழங்கப் பெற்றது. வறண்ட மணற்பாங்கின் வழியாக வேற்று நாட்டிற்குப் பொருளீட்டச் சென்று வருவோரை அவர்களை வழிமறித்துக் கொள்ளையடித்து வாழ்ந்தவர்கள் தான் பாலை நிலத்தோராவார்; இவர்கள் மறவர் எனப்பட்டனர்.

இந்த ஐந்து நிலத்திற்குமேற்ப அரசர்கள் அமைந் தார்கள். ஊர்தோறும் தமக்குள் ஒரு தலைவனைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள முனைந்தனர். அவ்விதம் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைவனுக்கு அடங்கி வாழ்ந் தனர். அவ்வரசனும், அவர்களின் இன்பமே தன் இன்ப மெனக் கருதிக் கடமைகளைச் செய்து வந்தான்.

1. குறிஞ்சி நிலத் தலைவன் வெற்பன்.
2. முல்லை நிலத் தலைவன் குறும்பொறைநாடன்.
3. மருத நிலத் தலைவன் ஊரன்.
4. நெய்தல் நிலத் தலைவன் துறைவன்.

இவர்களால் ஆளப்பட்டதே முதன்முதல் சிற்றூராட்சி யாகத் திகழ்ந்தது.

**வாழ்வின் வகை**

குறிஞ்சி நிலத்தோர் வேட்டையாடி, மலைகளிற் கிடைக்கக்கூடிய கிழங்குகளையும், மலை நெல்லையும் உணவாகக் கொண்டிருந்தனர். இளம் பெண்கள் பகற் பொழுதில் பரண்மீது ஏறி தினைக் கதிர்களை உண்ணவரும் பறவைகளை விரட்டினர். இரவு வேளையில் குறவர்கள் தினைப்புனத்தைக் காவல் காத்தனர். மலைச்சாரலிலே தொங்கிக் கொண்டிருக்கும் தேன் கூடுகளை அழித்து, அத்தேனை மூங்கிலினால் செய்யப்பட்ட குழாய்களில் ஊற்றிவைத்தனர். இவர்களின் தெய்வமாகத் துலங்கினான் முருகன். இவர்கள் மலையின் வாயிலாகக் கிடைத்திடும் யானைக்கொம்பு, புலித்தோல், இறைச்சி முதலியவற்றை மற்ற இடங்களில் கொண்டு சென்று விற்று வாழ்வு நடாத்தினர்.

முல்லை நிலத்தோர் ஆடுமாடுகளை வளர்த்து, அதன் பயனாக உண்டாகும் பால், தயிர், நெய் போன்றவைகளை வேற்றிடங்களுக்குக் கொண்டு சென்று, விற்பனை செய்து, தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று வந்தனர். இவர்களின் வாழ்க்கை அமைப்பு குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் தொடர்புள்ள வகையில் அமைந்திருந்தமையால் இடையரெனக் கூறலாயினர். இவர்களின் தெய்வமாக விளங்கியது திருமால். அத் தெய்வத்திற்குப் பாற்பொங்கலிட்டு வழிபட்டனர். இங்குக் குரவைக்கூத்து நடைபெற்றது. அதாவது பல மங்கையர்கள் கைகோத்து வட்டமாக நின்று ஆடுவதாகும். இதுவே அவர்களின் வாழ்வு.

மருத நிலத்தோர் நிலந்திருத்தி, ஆற்று வெள்ளத்தைக் கால்வாயின் வழியாக வயல்களுக்குப் பாய்ச்சி அனைவருக்கும் தேவைப்படக்கூடிய உணவுப் பொருள்களைத் தோற்றுவித்தனர். இவர்களின் தெய்வமாக வேந்தன் இருந்தான். உழவினால் உணவுக்கும் உடைக்கும் குறைவின்றி இருந்தது மருதநிலம்.

நெய்தல் நிலத்தோர் கடலிலே கட்டு மரங்களையும் படகுகளையும் கொண்டு மீன் பிடித்தனர். உப்பை விளை

வித்தனர். இவ்விதம் உப்பு விற்போரை உமணரென அழைத்தனர். இவ்வுப்பைக் கழுதையின்மீது ஏற்றிப் பிற நிலங்களுக்குக் கொண்டு சென்று விற்று வாழ்வை நடாத்தினர். அங்குள்ள—தமக்குத் தேவையான பொருள்களை வாங்கி வந்தனர். இங்ஙனமே நால்வகை யான நிலங்களிலும் வாழ்வு நடைபெற்றுக் கொண்டிருந் தது. பாரதியார் குறிப்பிட்டுச் சென்ற,

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியுங் கிழங்குந் தானியங்களும்
கணக்கின்றித் தரும் நாடு

என்றாரே, அந்தத் திருக்காட்சிதான் மேலே நால்வகை நிலங்களிலே காணப்பட்ட காட்சி. ஒருவருக்கொருவர் ஒற்றுமையோடு வாழ்ந்து தம்தம் பொருள்களைப் பரி மாறிக் கொண்டனர். இதுவே, அந்தந்த நிலத்தின் வாழ்வின் வகைகளாக இலங்கின.

நால்வகையான நிலங்களில் மருதநிலத்தின் சிறப்பே தலைசிறந்து நின்றது. காரணம், மற்றைய நிலத்தார்க்குத் தேவையாக நின்றது நெல்லாகும். ஆகவே அனைவருக்கும் தேவைப்பட்ட உணவுப் பொருளாக விளங்கிய காரணத் தால் மருத நிலத்தோரை ஏனைய நிலத்தோர் மதிக்கத் தலைப்பட்டனர். மற்ற நிலத்தில் உள்ளவரும் மருத நிலத்திற்கு வந்து வாழத் தலைப்பட்டனர். மருத நிலத் திலே வருவோருக்கும் போவோருக்கும் ஏற்ற பாதைகள் அமைக்கப்பட்டன. அழகிய வீடுகளைக்கட்டி வாழ்ந்தனர். பயிர் செய்வதற்கான கலப்பை, கொழு, நுகம், கத்தி, அரிவாள் போன்ற கருவிகள் தேவைப்பட்டன. மகிழ்ச்சி பொங்கும் வகையிலே பொழுது கழிப்பதற்குரிய வசதி களை விரும்பினர். ஆகவே அதற்கான பொருள்களைச் செய்வதற்கான தொழிலாளர்கள் அங்கு வந்து தங்கலா யினர். அதற்கேற்றாற்போல் மருத நிலத்தில் செல்வங்கள் குவியலாயின. அந்தச் செல்வங்களைக் கவர்ந்து செல்லப் பகைவர்கள் வருவார்கள். அப் பகைவரை எதிர்த்துப் போர் புரியப் படைவீரர்களும் அதற்குத் தலைமை ஏற்று நடாத்தும் அறிவும் ஆற்றலும் ஒருங்கே பெற்ற

ஒருவனும் தேவைப்பட்டனர். அதன்படி வேறு நிலத்தி லிருந்து குடியேறியவர்களையும் தம் நிலத்திலுள்ளவர்களை யும் ஒருங்கே வைத்துப் படையமைத்தான், அம் மருத நிலத் தலைவன். வள்ளுவர் குறிப்பிட்ட,

"முற்றியும் முற்று தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண். —குறள்-748.

என்பதுபோல, முற்றுகையிட்டும், முற்றுகை யில்லாத வகையில் போர் செய்தும், வஞ்சனையோடும் பகைவரால் கைப்பற்ற முடியாத அரணை—மதிற் சுவரைச் சுற்றிலும் எழுப்பினான். இங்கிருந்தே ஆட்சியும் நகர் வளமும் செழித்தோங்கலாயின. எனவே, நான்கு நிலத்தின் மன்னர்களான,

*மாயோன் மேய காடுறை உலகம்
சேயோன் மேய மைவரை உலகம்
வேந்தன் மேய தீம்புனல் உலகம்
வருணன் மேய பெருமணல் உலகம்
—தொல். அகத்திணையியல்—5

என்ற நான்கு வகையான மன்னர்களில் மருதநிலத் தலை வனே சிறந்து விளங்கப் பெற்றான். இத்தகு வளர்ச்சி யின் பின்னேதான் மூவேந்தர் ஆட்சி தொடங்கலாயிற்று.

## தொல்காப்பியர் கண்ட வண்புகழ் மூவர்

ஒவ்வொரு நிலத்திற்கும் தலைவனாக விளங்கப் பெற் றது மாறி, நிலப்பரப்பு விரிவடையவும், மக்கள் பெருக வும் பல குறுநில மன்னர்களுக்கு ஒரு தலைவன் பெருநிலக் கிழவோனாக மாறினான். அவனுக்கு, அடங்கி வாழ்ந் தனர், குறுநில மன்னர்களும் மக்களும். இதுவே மன்னர் தோன்றிய வரலாற்றுச் சுருக்கம். இதன் பின்னர்தான்,

'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'
—தொல்காப்பியம்

---

*மாயோன் - குறிஞ்சிநில மன்னன்; சேயோன்-முல்லை நில மன்னன்; வேந்தன் - மருதநில மன்னன்; வருணன் - நெய்தல்நில மன்னன்.

என்றதற்கேற்ப, சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சி தோன்றலாயிற்று. பண்டைய நாளின்போது தமிழ்நாடு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1. மேற்குப் பகுதி—சேரன் குடும்பத்தினர் ஆண்டனர்.
2. கிழக்குப் பகுதி—சோழன் ,, ,,
3. தெற்குப் பகுதி—பாண்டியன் ,, ,,

இம் மூன்று பிரிவுகளையும் முறையாக முத்தமிழ் வேந்தர்கள் தம்தம் நாட்டில் எக்குறையும் நேராத வண்ணம் பாதுகாத்து வந்தனர். இவர்கட்கு முறையாகச் சேர அரசனுக்குப் பனைமாலையும், சோழ அரசனுக்கு ஆத்தி மாலையும், பாண்டியனுக்கு வேப்பமாலையும் அடையாளச் சின்னமாக அமையப் பெற்றன. இம்மலர் மாலைகளை ஒவ்வொருவரிடமுள்ள படையினரும் அணிந்திருந்தனர் என்பது.

போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும் —தொல்காப்பியம்

என்ற வரிகளால் தெள்ளத் தெளிய விளங்குகிறது. அப்படியே முப்பெருங் கொடிகளும் விளங்கலாயின. அதற்கான காரணங்களும் விளங்கின. அவை :—

(1) விண்முட்ட இருந்துவரும் மலைகளில் வாழ்ந்தமையால் அங்கு கொடிய விலங்குகள் அலைந்து கொண்டிருந்தன. அதனையொழிக்கும் பொருட்டு எப்பொழுதும் வில்லம்புடனேயே வாழ வேண்டியவர்களாயினர். அந்த வில்லின் வாயிலாகச் சிறந்த வீரர்களாயினர். ஆகவே, அதையே தம் சின்னமாக அமைத்துக் கொண்டனர் சேரர்கள்.

(2) சோழர்கள் முன்னால் ஆண்டிருந்த பகுதிகள் வெறும் காடு மயமாக இருந்த காரணத்தால் புலி போன்ற விலங்கினங்கள் நிறைந்திருந்தன. அவைகளைத் தமக்குள்ள தனித்திறமையால் வேட்டையாடி, நாட்டு மக்களின் குறையினைப் போக்கினர். வளமை மிகுந்த புலிதனைக்

கொன்று, காட்டை நாடாக்கிப் பெருவளமாக்கினர். அதன் பயனாக, அவர்களின் திண்தோள் வலிமைக் கொப்ப புலிச்சின்னம் கொடியாகப் பிறந்தது.

(3) பாண்டிய நாடு கடல் சார்ந்து இருந்தமையான் அடிக்கடி கடல்கோட் படக்கூடிய சூழல் இருந்து வந்தது. அதுபோது மன்னன் இமை மூடாது மக்களுக்கெனப் பாடு பட்டான். அது, எத்தகைய தன்மையினதாக விளங்கிய தென்றால், மீன் தன் விழிகளால் தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதை யொப்பப் பாண்டியன் தன் மக்களைக் காத்து வந்தான் என்பதின் அறிகுறியாக விளங்குவதுதான் கயற்கொடி.

இங்ஙனம் மூவேந்தர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் மேன் மேலும் புதுமைகள் தோன்றலாயின ; பண்பாடு வளரலாயிற்று ; நாகரிகம் முதிர்ச்சி பெறத் தொடங்கியது. அறம், அன்பு, இரக்கம், ஈகை ஆகிய இன்ன பிறவற்றையும் தன்னகத்தே கொண்டவர்களாயினர். சேரனின் வில்லின் வலிமையும், சோழர்கள் நெல் உணவால் அறம் செய்து தம் புகழை உயர்த்திக் கொண்டதும், கல்வியின் பயனடைந்த பாண்டியர்களும் முறையே ஒத்த அன்பினராய் இருந்தனர். மக்கள் மன்னனைத் தெய்வமாகக் கருதி வணங்கினர். ஆகவேதான் மன்னனால் நன்மையும் தீமையும் செய்ய இயலும். அதிலும், உடனே செய்வதற்கு முடியும் என்ற கருத்தினால்தான்,

''அருளு மேலரசு சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தனும் மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ''

—சீவக சிந்தாமணி—247.

எனத் திருத்தக்கதேவர் அருளிச் சென்றார்.

சங்க காலத்துப் புலவராக விளங்கப் பெற்ற மோசிகீரனார் மன்னனுக்குள்ள தலையாய கடமைகளைப் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

இத் தொல்லுலகில் மனிதன் வாழ வேண்டுமானால் உடலைப் பாதுகாக்க வேண்டும்; அந்த உடலைப் பாதுகாப்பதற்கு உணவுதான் மிக முக்கியமாகத் தேவைப்படக் கூடியது. அதுபோலவே நீரும். ஆனால் உடலில் உயிர் நின்று இருப்பதற்கு அவையல்ல முக்கியம், மக்களை ஒரு வழிப்படுத்திச் செந்நெறி தழைக்க எவன் ஆட்சி புரிகிறானோ, அவனே மன்னனாவான். அவன்தான் இவ்வுலகிற்கு உயிர் போலாவான் என்னும் நோக்கத்தால்தான்,

*நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்;*
*அதனால், 'யான் உயிர்' என்ப தறிகை*
*வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே*

*—புறநானூறு—*186

என்று முடிக்கிறார்.

இதன் அடிப்படையில்தான் சேரன் செங்குட்டுவன் அரசாள்வது பற்றிக் குறிப்பிடும்போது, 'விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து...உள்நின்று உடற்றும்பசி' என்ற பொய்யில் புலவனின் பொருளுரைக்கேற்ப, 'மழை பெய்யாமல் பல்வளம் குன்றும்போதும் உயிர்கள் துன்பத்தை அடையும்போதும் வேந்தனுக்குக் கவலை மிக மிகத் தோன்றும். இதனால்தான் அரசகுடியிற் பிறந்து ஆட்சிபுரிவது துன்பமே யல்லாது இன்பமில்லை' என்பதற்கேற்ப,

*மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்*
*பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்*
*குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி*
*மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்ப மல்லது தொழுதக வில்லென*

*—சிலப்பதிகாரம்—*100-104.

என்று இளங்கோவடிகள் அறிவித்துள்ளார்.

சேக்கிழாரும் ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடுங்கால் 'அருமந்த அரசாட்சி அரிதோ ? மற் றெளிதோதான்' என்றார் ஆயினும், குறை நேராத வண்ணம் மூவேந்தரும் ஆண்டனர். மூவருக்கும் தனித்தனியாக பாகுபாடுகள் வரை

யறுத்திருந்தாலும் தமிழ்—தமிழ்நாடு—தமிழ் இனம் என்ற பாசத்தால் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாது இருந்தனர். வெளிநாட்டுச் செய்திகளைக் குறித்தோ, வேறு வியாபாரத் துறைகளைக் குறித்தோ இருந்தாலும் வில், புலி, கயல் ஆகிய மூன்று கொடியும் ஒரு சேரப் பறக்கும். அந்த ஒற்றுமையைத்தான்,

"வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்றமிழ் நன்னாட்டுச் செழுவில் கயல்புலி
மன்தலை யேற்ற வரைக ஈங்கென"

—சிலப்பதிகாரம்—170-127.

என்று அடிகளார் காவியத்தில் குறிப்பிடுகிறார்.

முடத்தாமக்கண்ணியார் என்ற புலவர், மூவேந்தர்கள் ஒற்றுமையோடு ஒருங்குகூடி வாழ்ந்த வாழ்க்கையைக் குறிப்பிடும்போது, தன்னிடத்திலேயுள்ள யாழையே சான்றுக்குக் கொண்டு வந்தார். யாழினிடத்திலே உண்டாகும் இன்னிசையும் அதற்கேற்றாற்போல் அமையும் ஆடலும் பாடலும் ஒருங்கு கூடி நிகழும் செயலுக்கு சேர, சோழ, பாண்டியர் அரசவையிலே ஒருங்குகூடி இருந்ததை விளக்குகிறார்.

"பீடுகெழு திருவின் பெரும்பெயர் நோன்றாள்
முரசுமுழங்கு தானை மூவருங்கூடி
அரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅல்
கோடியர் தலைவ" —பொருநராற்றுப்படை.

இங்ஙனம் ஒன்றுபட்டு மூன்று மன்னர்களும் இருந்தனர். அங்ஙனமே, 'மன்னன் எவ்வழியோ மன்னுயிர் அவ்வழி' என்பதற்கொப்ப நாட்டு மக்களும் ஒற்றுமையோடு ஒன்றி வாழ்ந்தனர். தமிழருக்குள் தமிழர் பகைமை பாராட்டி—நாம் எது செய்கிறோம் என்று எண்ணாது இன்று செய்யும் தமிழர்களல்ல அன்றிருந்தவர்; உயர்ந்த உள்ளம் படைத்தவர்களாகத் திகழ்ந்தனர். அந்த உலகத்தைக் கனவில் கண்ட பாரதியார்தான், இக்காலங் குறித்து நொந்து,

"மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி யுண்டோ?"

என்ருர்போலும். அத்தகைய ஒப்புயர்வுற்றவர்களாக நம் முன்னேர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் வாழ்வில் தாழ்வு புகுந்ததில்லை அருள் நெஞ்சம் குறைந்ததில்லை. பரந்த மனப்பான்மை குன்றியதில்லை. எவரையும் இன் முகத்துடனேயே பார்த்தனர். காரணம், மன்னர்கள் அந்த அளவிற்கு குன்றின் மீதிட்ட விளக்கொளியாய்த் திகழ்ந்தனர். அவர்கள் ஆண்டது முடியாட்சியே என்ருலும் குடியாட்சியாகவே இருந்தது. உரிமை உலவியது. அடக்கியாளும் கொடுங்கோலாட்சி அவர்களுக்குத் தெரியாததாகும். அத்தகைய வீறுபுகழ் பெற்று விளங்கினர், மூவேந்தர்களும்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

என்ற குறளுக்கொப்ப மூவேந்தர் நாடும் பொலிவோடு இருந்தன.

## ஆட்சி முறை

படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

என்னும் கருத்திற்கேற்ப ஆறுவகையான அங்கங்களையும் கொண்டவனுக விளங்கப் பெற்ருன் மன்னன். அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை என்னும் பண்புகளை அணிகலனுகப் பெற்றிருந்தான். கல்வியுடைமை இருந்தது; துணிவுடைமை இருந்தது; அறந்தவருது, அறமில்லாத செய்கைகளைக் கொள்ளாது, வீரத்தில் குறைவு இல்லாமல். மானத்தோடு தன் ஞட்சியை நடாத்திச் சென்றனன். இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்தவை வகுத்தலும் வல்ல அரசனுகத் திகழ்ந்தான். காண்பதற்கு எளியனுகவும், கடுஞ் சொற்களைக் கூருதவனுகவும் இருந்தான். நீதி முறையோடு மக்களைக் காத்தான்; பெரியோரின் துணைகொண்டான். கொடை, அருள், செங்கோன் முறை, தளர்ந்தவர்களைக் காத்தல் போன்ற நல்லியல்புகளில் அக்கறை

காட்டினான். அவனது ஆட்சியின்கண், அவனுக்குத் துணையாக *'ஐம்பெருங்குழு', ‡'எண்பேராயம்' என்ற இருவகையான பேரவைகள் இருந்தன.

*சாந்துபூக் கச்சடை பாக்கிலை கஞ்சுக நெய்*
*ஆய்ந்தஇவர் எண்மர் ஆயத்தர்*
*மாசனம்பார்ப் பார்மருத்தர் வாழ்நிமித்த*
*ஆசில் அவைக்களத்தார் ஐந்து.* [ரோடமைச்சர்
—வெண்பா

இம்முறையின்கண் அரசாட்சி நடைபெற்றது. நீதி நிலவியது. போரும் பிணக்கும், அவ்வாட்சியின்கண் இருக்குமிடம் தெரியாமல் இருந்தது. மன்னவனுக்கும் போரினால் வரும் புகழல்ல, பெரிதாகக் கருதியது; எவரிடத்திலும் விருப்பு வெறுப்பு இல்லாது நடுநிலை வகித்து செங்கோலால் ஆட்சி புரிந்ததேயாகும். அதைத்தான் வள்ளுவரும்,

வேலன்று வென்றி தருவது, மன்னவன்
கோல்;அதூஉம் கோடா தெனின்'' —குறள்.

எனக் குறித்தார். அம் முதுமொழிக்கேற்பத் தமிழரசர் ஆட்சி புரிந்தனர்.

'அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்'
—பொருநராற்றுப்படை

என்பதற்கிணங்க, அறத்தினை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கினர். குடிமக்கட்கு இறைவராக நின்று நல்லொழுக்கத்தைப் புகட்டினர். அதன் அடிப்படையாய் பிறந்ததுதான்,

---

*ஐம்பெருங் குழுவில் அமையப் பெற்றோர்:—
1. அமைச்சர், 2. புரோகிதர், 3. சேனாதிபதியர், 4. தூதுவர், 5. சாரணர்.

‡எண்பேராயத்தில் அமையப் பெற்றோர்:—
1. கரணத்தியலவர், 2. கருமவிதிகள், 3 கனகச்சுற்றம், 4. கடை காப்பாளர், 5. நகரமாந்தர், 6. படைத்தலைவர், 7, யானை வீரர், 8. குதிரை வீரர் ஆகியோராவர்.

'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே'

—புறநானூறு 312

என்ற பொன்வரி.

ஒரு நாட்டின்மீது போர் தொடங்குவதற்கு முன்னதாக, அந் நாட்டிலுள்ள பசுக்களையும், பார்ப்பாரையும், பெண்டிர், பிணியாளர், முதியவர், குழந்தையேயில்லாத ஆடவர், குழந்தைகள் ஆகியோரை அப்புறப்படுத்திப் படையாளர்களுடன் மட்டும் போர் புரிந்த நிலை தமிழகத்திற்கு மட்டுந்தான் உரியதொரு ஒழுக்கப் பண்பாகத் திகழ்ந்தது. அதோடு,

அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவுங் களவோர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்;
உருமும் உரறாது; அரவுந் தப்பாது;
காட்டு மாவும் உறுகண் செய்யா

—பெரும்பாணாற்றுப் படை 39—43

என்று எடுத்துக் கூறுவதை யொப்பத் தொண்டைமான் இளந்திரையன் ஆட்சியின் கீழ் உள்ள நிலப் பகுதியில், 'வழி போவோனைத் தாக்கும் இழிசெயல் நடைபெறவில்லை; விண்ணினின்று இடிவிழுவதில்லை; பாம்பு தீண்டுவதும் கிடையாது. புலி முதலிய விலங்கினங்களும் யாருக்கும் தொல்லை கொடுப்பது கிடையாது' எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற பெரும்புலவர், ஆட்சியின் வளமையை விளக்குகிறார். வள்ளல்கள் இருந்தனர். அறிவு மணம் கமழச் செய்யும் புலவர்கள் அவையை அலங்கரித்திருந்தனர். இஃதொன்றே பழந்தமிழ் மன்னர்களின் பண்பினை அளக்க உயரிய கோலாகும்.

## படையின் திறன்

படைவீரர்கள் மன்னருக்கு உடம்புபோல நின்று, தக்க வேளையில் கடமையாற்றி வந்தனர். அந்த உண்மையை உணர்ந்த புலவரொருவர் பாண்டியனைப் பார்க்கச் சென்றபோது,

நின்னொடு தொன்று மூத்த வுயிரினும் உயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
வாணின் வாழ்நர் —புறம் 24

எனச் சொல்லிச் சென்றார்.

'மன்னனின் திருமேனியாய் விளங்கும் படைவீரர்கள் வாழ்க!' எனும் முகத்தால் பறையறைவோன் செங்குட்டுவனை, அவன் உடம்புபோல் விளங்கும் படைவீரர்களை வாழ்த்திய செய்தியை,

தாழ்கழல் மன்னன் தன்திரு மேனி
வாழ்க சேனை முகமென வாழ்த்தி —சிலம்பு 191—193

என்ற வரிகள் அறிவிக்கின்றன. போர் என்றாலே புது மலர்ச்சி பெறும் படைவீரர்கள்தான் தமிழகத்துக்கு அரணாக விளங்கினர். எண்ணியதை முடிக்கும் திண்மை நிறைந்த திண்தோள் பெற்ற மன்னர்கள் இருந்தாரென்பதற்குக் கரிகால் வளவன் ஒருவனே சான்று என்பதற்கு,

மலைபுகழ்க் குவனே; கடல்தூர்க் குவனே;
வான்வீழ்க் குவனே; வளிமாற் றுவன்எனத்
தான்முன் னியதுறை —பட்டினப்பாலை

என்ற வரிகளே தக்க சான்று. படைவீரர்களனைவரும் எதிர்ப் படைகளைக் கவசமாகக் கருதியிருந்தனர். ஆகவே தான் அத்தகைய படைவீரர்களை,

'நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை
—பதிற்றுப்பத்து 14

எனப் புகழ்ந்தனர். இதுபோன்ற பல்வகையான முறைகளோடு முடியுடை வேந்தர்களின் ஆட்சி இருந்துவந்தது. ஆகவேதான், அவர்களிடம் வாழும் மக்கள், அவனது ஆணையின்கீழ் அடங்கி வாழ்வதே தமக்குச் சிறப்புடையதாகக் கருதினர்.

## ஆட்சியில் நீதி

இவ்வுலகில் பல்வகையான உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றிற்கெல்லாம் மழையே மிக மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. அஃதில்லையேல் அவைகளிடத்தில் துன்பமே மிகுதியாகச் சேரும்; ஆனால் மக்களுக்கோ மாந்தர் தம் நல்வாழ்வுக்கோ மன்னன்தான் அவசியமாகக் காணப்பட்டான். மக்கள் மன்னனின் செங்கோலையே எதிர்பார்த்துக் கிடந்தனர். நீதிதான் மன்னனை அளக்கும் அளவுகோலாக இருந்தது. நீதியிலிருந்து வழுவினால் அவ்வாட்சியின்கீழ் நடைபெறும் மாதவர் நோன்பும் பெண்களின் கற்பும் காண்பது அரிதாகிவிடும், என்பதைக் குறிக்கும் வண்ணம் சீத்தலைச் சாத்தனார் என்னும் முத்தமிழ்ப் புலவர்,

> மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
> காவலன் காவ லின்றெனி னின்றால்
>
> —மணிமேகலை 22: 208—29

என மொழிந்துள்ளார்.

அது மட்டுமல்ல, கோவலன் இறந்தான் என்ற செய்தி கேட்ட கண்ணகி சீறி எழுந்தாள். நெடுஞ்செழியனைக் கண்டாள். 'நீ யார்?' என்று கேட்டான் மன்னன். ''பசுவின் கன்றை அறியாது கொன்ற தன் தனயனை அதே தேர்க்காலிலிட்டுக் கொன்று, நீதியை நிலை நாட்டிய அரசன் வாழும் பூம்புகார்'' என்று கூறினாள்.

> வாயிற் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத், தான் தன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
> பெரும் பெயர்ப் புகார் —சிலப்பதிகாரம்

அவள் சொற் கேட்டான். நீதி அவனைச் சுட்டெரித்தது; கோவலனைக் கொன்றதைக் கண்ணகியின் வாயிலாக அறிந்தான், நெடுஞ்செழியன். நீதியைக் கொன்றதாக உணர்ந்தான்; உடனே,

> பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
> யானோ அரசன் யானே கள்வன்

*மன்பதை காக்குந் தென்புலங் காவல்*
*என்முதற் பிழைத்தது கெடுகவென் ஞயுள்''*

*—சிலப்பதிகாரம்,* **20: 74—78**

*என தன்னைத்தானே நொந்துகொண்டு உயிர் விட்டான். ஆகவே செங்கோலின் உயர்விலிருந்து விலகினால் உயிர் வாழார் என்பதை அழகுற எடுத்து விளக்கினார் இளங் கோவடிகள். அந்த அளவிற்கு நீதியைப் பாதுகாத்தனர். அதனாலேயே முடியாட்சியாக அப்போது தெரியவில்லை. எங்கும் குடியாட்சி போலவே நிலவியது. மன்னன் தவறான வழிகளில் செல்லும்போது புலவர்களும் அமைச்சர் முதலானோரும் திருத்த முயன்றனர். அத்தகைய சீரும் சிறப்பும் ஓங்க வாழ்ந்து காட்டினர். நீதியை நிலைநாட்ட வைத்தனர். மக்கள்—அந் நீதியின் கீழ் பல்வளம் சூழ வாழ்ந்தனர்.*

## தொழிலும்—அமைப்பும்

*அரசனுக்கெனச் சில தொழில்கள் இருந்து வந்தன. ஓதல், ஈதல், காத்தல், தண்டித்தல் போன்றவைகள் மன்னனின் தொழிலாக அமைந்தன. இதையேதான் தொல்காப்பியமும் கூறும். வேந்தனாக விளங்குபவன் யானையேற்றம், குதிரையேற்றம், படைக்கலத்திற்குரிய பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவனாக இருத்தல் வேண்டும். அரியவற்றுள் அறிய வேண்டிய கல்வியைப் பெற்றவனாக இருத்தல் வேண்டும். இங்ஙனம் அனைத்திலும் வல்லவனாக இருப்பவனே மன்னனாக வீற்றிருந்தான். அதோடு, சிறந்த வள்ளன்மை கொண்டவனாகவும் இருந்தான். தன் நாட்டில் தன் மக்களுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வருகின்ற அச்சங்களைப் போக்கக்கூடியனவாகவும் இருந்தான். ஒழுக்கத்திற்கு — பண்பிற்கு — மாறாக நடப்பவர்களைத் தண்டித்து, ஒழுக்கமுடையோரைக் காத்து வந்தான். அதாவது வளர்ந்துவரும் நெற்பயிருக்குத் தீமை விளைவிக்கும் களைகளைப் பிடுங்கி எறிந்து பயிரைக் காப்பது போல் தீயோரைப் போக்கி நல்லோரை வாழ்வித்தல் வேண்டுமென்பதை,*

*கொலையிற் கொடியோரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனொடு நேர்.* —குறள்

என வள்ளுவர் சொல்வதுபோல் மன்னன் செயலில் செய்து காட்டினான். அதனாலேயே நல்லவர்கள் சூழ்ந்த நன்னிலமாக விளங்கியது.

**மன்னனுக்குரிய வருவாய்**

*தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு*
*ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.* —குறள்

ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழ்க்கையைத் தொடங்கும்போது தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து வகையாரையும் சற்றும் அறநெறி தவறாது போற்றுதலே தலையாய கடமை என்பதை நோக்கும்போது ஆறில் ஒன்று அரசனுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியென்பது நினைவில் வைத்துக் கொள்ளத்தக்கது. வறுமையால் நைந்த மக்களிடம் மன்னன் வரி வசூலிக்கவில்லை. அத்தகைய நிலையிலுள்ளோருக்கு வேண்டிய பொருள் கொடுத்துத் தன் புகழை உயர்த்திக் கொண்டான் தமிழகத்து மன்னன், என்று சொன்னால் மிகையாகாது. கடல் வாணிகத்திற்கு ஏற்றுமதி இறக்குமதிச் சுங்கம் வாங்கினன் என்பது பட்டினப்பாலையால் விளங்குகின்றது. அதோடு,

*'சாத்தோடு வழங்கும் உல்குடைப் பெருவழி'*

—பெரும்பாணாற்றுப்படை

என்ற வரியால் உள் நாட்டிலும் அரசனுக்குரிய சுங்கம் கிடைத்தது என்பது தெரியவருகிறது. குறுநில மன்னர்கள், முடிவேந்தனுக்குக் காசு கொண்டும் ஒரு சிலர் பண்டங்களாலும் திறை செலுத்தினர். இப்படி வருகின்ற வருவாயைத் தன்னலத்திற்குப் பயன்படுத்தவில்லை. பொதுநலத்திற்கே மன்னன் பயன்படுத்தினான்; மக்கள் நல்வாழ்வே தன் நல்வாழ்வெனக் கருதினான்.

மக்களும் 'மன்னன் உயிர்த்தே இம்மலர்தலை யுலக'மென அடக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்தனர்.

இதுவரையில் இலக்கியங்களை, பாரதியார் தந்து விட்டுச் சென்ற மணிமொழிகளை அடிப்படையாகக் கொண்டு பண்டைய சமுதாய அமைப்பு முறை எவ் வகையில் தோன்றியது? எப்படி இருந்தது என்பது பற்றி ஒருவாறு கண்டோம். இனி பண்டைய உள்ளங்கள் கொண்டிருந்த பண்பாடுகளையும், அவ்விதம் அமைந்த தற்கு முதன்மையாக இருந்த மனத்தையும் இனிது காண்போம்.

# பண்டைய உள்ளம்

**மனிதன் யார்?**

இந்தக் கேள்வி மிக மிகச் சிறிதுதான். ஆனால் நுணுகி நுணுகிப் பார்க்கின்றபோதுதான் அதன் உட்பொருள் பெரிதென்பது விளங்கும். நான்கு அடி அகலமும், ஆறு அடி நீளமும் உள்ளவன் மனிதனாவானா? அல்லது ஆடம்பரமாக வாழ்ந்து—பல பாதகச் செயல்களைச் செய்துகொண்டு வாழ்பவன் மனிதனாவானா?

இல்லை, இல்லை! மனம் படைத்தவன் எவனோ அவன் தான் மனிதனாவான்.

மனம் என்று ஒன்று அமைந்தால்தான் விலங்கினத்திலிருந்து பிரிந்து உயர்திணையில் நிற்கத் தலைப்படுவோனானான். உள்ளம் என்று இருப்பதால்தான் யாவற்றையும் எண்ண முடிகிறது. அப்படி எண்ணுகின்ற எண்ணம் மூளையோடு ஒன்று சேர்ந்து ஒருவகையான புத்தொளியைத் தோற்றுவிக்கின்றது. அங்ஙனம் அகத்திலே மலரும் கருத்தின் பிரதிபலிப்புத்தான் புறத் தோற்றமாக நமக்குக் காட்சி செய்கிறது. இதைத்தான் வள்ளுவரும்,

> 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்'

என்றார்.

இன்று, இம்மனத்தைப் பலர் பல துறைகளில் அலையவிட்டுத் தம்முடைய தன்மையிலிருந்து விலகிக் கொள்கின்றனர். என்னே, விந்தை! எண்ணுந்தோறும்

எண்ணுந்தோறும் கவலேயே மேலிடுகின்றது. எதை எதையோ எண்ணுகின்றனர்; எண்ணியதை நன்கு சிந்தித்துப் பார்ப்பதில்லே. உடனே செயலில் இறங்கி விடுகின்றனர். இறுதியில் தீராத பழிச்சுமையைத் தாங்கிக் கொள்கின்றனர். பிறிதொரு சாரார் தன் னலத்திற்காகப் பலரையும் தம் பக்கம் திருப்புவதற்காக வெறிதனைப் புகட்டி, உண்மையை மறைத்து, பொய் யையே திரித்துக் கூறி நல்ல உள்ளங்களேத் தீய எண்ணத் திற்கு வழியாக இழுக்கச் செய்கின்றனர். தாம் ஒருவர் வாழவேண்டும் என்பதற்காகப் பலரை இந்த உலகத்தில் பொல்லாதவராக்கி விடுகின்றனர். எண்ணித் துணியும் நிலேமை என்று வருகின்றதோ, அது வரையில் தமிழ ருக்கு வாழ்வில் வளமில்லே. உள்ளுவதெல்லாம் உயர் வுள்ளதாக இருக்க வேண்டும்.

இந்த உணர்வு, பண்டைய நாளில் நம் முன்னேர் களிடத்தில் நிறைந்து இருந்தது. அங்கு, வெறி தலே விரித்தாடவில்லே. தனிப்பட்ட—எந்த விதமான நோக்க மும் இருக்கவில்லே; பரந்த நோக்கமே இருந்து வந்தது என்பதற்கு,

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'

என்ற ஒரு வரியே அதற்குப் போதுமான சான்ருகும். வருவோரை யெல்லாம் 'வா வா'வென அழைத்து ஆதரித்த தமிழகம்தான் இது. 'வறுமை'—என்றதொரு சொல்லேக் கேட்டவுடனேயே கண்ணீர் சிந்தி, 'ஐயோ, வறுமையா! அதிலும் இளமையில் வறுமையா?' எனக் கேட்டு வேண்டியதைக் கொடுத்து வாழ்ந்த அறிஞர்கள் நிறைந்த நாடு இது அன்ருே?

இல்லே. அப்படி ஒருவருமில்லே. அந்த அளவிற்கு மன மில்லே; நல்ல குணமில்லே. அப்படி இருந்தாலும் அவர் களேத் தடுத்து நிறுத்தும் மனிதர்கள்தான் ஏராளமாக இருக்கிருர்கள். இந்த நிலேமை அன்றில்லே. உள்ளத் தூய்மையே கோயிலாகக் கொண்டு ஒவ்வொரு புலவர் களும் வாழ்ந்தார்கள். ஆகையால்தான் மன்னன் தவறு செய்யும்போதும், அவன் வேறு வகையான வழியில் தன்

மனத்தைத் திருப்பும்போதும் திருத்துவதற்காக மன்னர்கள் பக்கத்திலேயே பெரும்புலவர்கள் இருந்தார்கள். அதனுலேயே நீதி வாழ்ந்தது; நேர்மை உலவியது.

இன்று அப்படியில்லை. எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகிவிட வேண்டுமெனக் கருதிவிடுகிருர்கள். இக்கருத்தை ஒரு கணப்பொழுது நினைத்துப் பார்த்தால் நம்மை நாமே செப்பனிட்டுக் கொள்ள இயலும். ஒன்ருக நின்று ஒருமித்த உள்ளத்தோடு வாழவேண்டும் என்ற எண்ணம் மறைந்து தனித்தனியாகப் பிரிந்து, சீரழிந்து போவதையே பெரிதும் விரும்பி வருகின்றனர்.

ஒரு குடும்பம் பல்வளத்தோடு வாழ்கின்றது. உற்ருர் உறவினர் பார்ப்பதற்கு எவ்வளவோ கவர்ச்சிகரமாகத் திகழ்கிறது. சில ஆண்டுகட்குப் பின்னர் பார்த்தால் அந்தக் குடும்பத்தில் உலவும் அண்ணன் தம்பிமார்களிடத்திலே தன்னலம் மேலிடுகின்றது; பொதுநலம் மறைகிறது. அதன் முடிவு, அவர்களைப் பிரித்துவிடுகின்றது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், அப்படிப் பிரிந்துவிட்ட அந்தக் குடும்பத்தின் பழைய செழிப்பையும் இன்றுள்ள நிலையையும் எண்ணிப் பார்க்கின்றனர்; கவலைப்படுகின்றனர். இதே நிலையில்தான் நம் தாயகமும் இருக்கிறது என்று சொன்னுல் குறைவாகாது.

மெய்ப்பொருள் காணும் அளவிற்குப் பொறுமை இல்லாத மனமாகிவிட்டது, தமிழர் மனம். யார்—எதைச் சொன்னுலும் உடனே நம்பிவிடும் மனமாக மாறிவிட்டது. அதனுல் எதைச் செய்கிறேம் என்பது அவர்களுக்கே புரியாததாகி விடுகின்றது. ஒருவருக்கொருவர் சுடுசொற் கொட்டித் தம்மைத் தாமே சுட்டெரித்துக் கொள்கின்றனர். எந்த மனத்தால் மனிதன் என்ற பெறற்கரிய பட்டம் பெற்ருனே, அந்த மனிதன் செம்மறியாடு போல் கண்மூடி நடப்பதுதான், இன்றைய தமிழ் நாட்டில் பெரும்பாலும் காண முடிகிறது. போலி உணர்வே தலைவிரித்தாடுகின்றது.

அன்று, அப்படியில்லை. உள்ளம் திறந்து உண்மை பேசினர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனிதர்கள் அங்கு வாழவில்லை. அதனுல்தான் என்

றென்றும் நிலைத்து நிற்கும் கருத்துக்களை நமக்கு அளிக்க முடிந்தது. பாரதியார்,

> "உள்ளத்தின் உண்மையொளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண்டாகும்" —பாரதி கவிதை

என்றதுபோல ஒவ்வொரு புலவர்களும் விளங்கினார்கள். அதன் பயன்தான் இன்று பல காவியங்களின் வாயிலாகவும், தொல்காப்பியத்தின் வாயிலாகவும், தொகை நூல்களின் வாயிலாகவும் பெற முடிகின்றது. அத்தகைய அரும்பெருங் கருத்துக்கள் உள்ள நூல்கள், இன்றைய நாளில், ஒருசிலர்தாம் ஒதுங்கி நின்று செய்து வருகின்றனர். பலர், எதை எதையோ எழுதி விடுகின்றனர். 'நான் எழுதியதுதான் அமர காவியம்' என்று பறை சாற்றிக் கொண்டு வருகின்றனர். நல்லதை உருவாக்குகின்றவர்கள், எங்கேயோ ஓரிடத்தில் இருக்கின்றனர். கெட்டதைச் செய்வதே உன்னதக் கலையாக நினைத்துக் கொண்டு தமிழுக்கும்—தமிழ் நாட்டிற்கும் தீங்கிழைப்பவர்கள்தான் எங்கு பார்த்தாலும் உலவி வருகின்றனர். இஃதொன்றே பண்பட்ட மனத்திற்கும் பண்படாத மனத்திற்கும் உள்ள வேற்றுமையை உணருவதற்கு ஏதுவாகும். மனம் என்று ஒன்று அமைந்த மனிதன், மனிதத் தன்மை பெறவேண்டுமானால் சித்தித்து ஒரு முடிவுக்கு வரக் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் தான் மனிதன்; அவன்தான் அறிவாளி; அவனால்தான் நாட்டுக்கு நல்லதைச் செய்ய முடியும். நல்ல கருத்துக்கள் நிறைந்த நூல்களை உருவாக்க முடியும். அப்படி உருவாக்கியவர்களே பண்டையப் புலவர்கள். அன்றைய புலவர்கள் நல்லதை வரவேற்றனர்; அதற்கு முதலிடம் தந்து போற்றினர். இன்றுள்ளவர்கள் தீமையானவற்றையே போற்றுகின்றனர்; புகழ் பாடுகின்றனர். அன்றைய நாளில் இருந்த மனிதரின் உள்ளமும் மூளையும் நல்லதை உற்பத்தி செய்யவே முனைந்தது. இன்றைய மூளையும் உள்ளமும் அணுகுண்டு போன்ற ஆபத்தான பொருளையே தோற்றுவிக்கச் செய்கின்றது. இதை எண்ணிப் பார்க்க தமிழர்தம் நெஞ்சம் முன்வர வேண்டும்.

படர்ந்து விழுது விட்டு நிற்கும் ஆலமரத்தைப் பாருங்கள். அங்கே கூடுகட்டி வாழ்கின்ற குருவிகளைப் பாருங்கள். அவைகள் எவ்வளவோ ஒற்றுமையோடு இலங்குகின்றன. நமக்குள்ள மனம் அதற்கில்லை. ஆனால் ஒத்த மனப் பண்பைக் காணுகின்றோம். எங்குப் போனாலும், எதைச் செய்தாலும் ஒன்றாகச் சேர்ந்தே எதையும் செய்கின்றது. நாமோ, மனம் என்றதொரு திருப்பத்தைப் பெற்றிருந்தும் அதை இயக்குவிக்கும் ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறோம். பாரதியார்,

"ஒற்றுமை வழியொன்றே வழியென்ப
தோர்ந்திட்டோம்; நன்கு—தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலாம்
மலைவுறோம்: சித்தம்—கலைவுறோம்"

என்றார். ஆங்கிலேயன் செய்யும் கொடுமைகளை நினைத்து எழுதிய பாடல் இது. இதையேதான் நாம் மேற்கொண்டு ஒற்றுமை இல்லையேல் நாட்டிற்கு முன்னேற்றமில்லை என்பதை உணர்ந்து திருந்த வேண்டும். ஒற்றுமை ஒன்று தான் நம்மை ஒன்றுபடுத்த வல்லது என்பதை நாம் உணரவேண்டும் என்பதற்குத்தான் அப்படிக் கூறிச் சென்றார். அதை, இனியேனும் மேற்கொள்ள வேண்டும். அந்த எண்ணத்தை வளர்க்க மனத்தை ஒருமுகமாக்க வேண்டும். மனம்போன பல்வேறு வழிகளில் சுற்றி அலைவதை விட்டுவிட்டு, அதை நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும். ஆறறிவு பெற்றிருந்தும் பொறியற்ற விலங்குகளைப்போல் வாழுகின்ற தமிழர்களைக் கண்டார், பாரதியார். உடனே,

எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள் போல்—பிறர்
காட்டிய வழி சென்று மாட்டிக்கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங் கோடிநயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல்வாழ்வார்

என்று பாடிச் சென்றார்.

தமிழரிடத்தில் சூழ்ந்துள்ள அறியாமையெனும் நோயைக் கண்டார்; கண்ணற்ற குழந்தைகளைப்போல், கண்டதை நம்பிப் பின் செல்லும் மாந்தர் தம் மனத்தைக் கண்டார்; பல்வகையான நூல்களில், அறிவுக்கான கருத்துக்கள் ஏராளமாக இருந்தும் பொறியற்ற விலங்கினைப் போல் நடக்கக் கண்டார்; நைந்தார்; எழுதினர். பண்டைய உள்ளங்களைக் கண்ட அவருக்கு இன்றையத் தமிழ் நாட்டின் சூழ்நிலையைப் பார்க்கும்போது மனம் கசியச் செய்தது. உடனே, அறிவைக் கொண்டே அறிவைத் தந்தார். பழம் பெருமைகளை இனியும் பேசிப் பயனில்லையென்பதை உணர்த்தினர். ஆனால் அதன்படி திருந்தி நடவாமலே இன்னும் பலர் இருக்கின்றனர்.

பண்டைய உள்ளம், இன்றுள்ள உள்ளமாக இல்லை; பண்பட்ட நிலம்போல் இருந்தது. அங்கே இருந்து பூத்த மலர்களும், காய்த்துக் கனிந்த கனிகளும், நெற்பயிர்களும் வாழ்கின்றவர்களுக்குப் பயன்பட்டது. பண்பென்னும் அறிவை, உள்ளமென்னும் பசிக்கு ஈந்தனர். பொய்யில் புலவர்கள், அறிவெனும் மருந்தை உள்ளமெனும் மூலிகையிலிருந்து தயாரித்து அறியாமையெனும் நோயைப் போக்கினர். அதனல் பண்பாடுடையவர்களாக வாழ்ந்தனர். எந்த வீட்டில் நுழைந்தாலும் அன்பு நிலவியது; அறம் வாழ்ந்தது; கொடைவளம் சிறந்தது; அறிவு மணம் கமழ்ந்தது; திருந்திய மனம் காணப்பட்டது; கடமை செய்ய முனைந்தவர்களிடத்தில் தெளிந்த உணர்வு—தேர்ந்த உறுதி தெளிவுபட்டுத் திகழ்ந்தது. நல்லதைச் செய்யவே முயன்றது. ஆனல் நம்மில் ஒரு சாரார், நம் முன்னேர்கள் காட்டிய அறவழியைக் குறை கூறுவதால், தாம் பெரியவர்கள் ஆகிவிட்டதாகக் கருதிக் கொண்டுவிடுகின்றனர். அப்படி நினைத்துக்கொள்வது, நம்மை நாமே பாழாக்கிக் கொள்வதாகும். ஒவ்வொரு மனிதனும் கடந்த காலத்தையும் கடந்த காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட உண்மையான கருவூலங்களையும் ஒருமுறை நினைத்துப் பார்த்தால்தான் இனியேனும் திருந்துவதற்கு ஏதுவாகும். அதை விட்டு விட்டு, அவர்களெல்லாம்—அவர்கள் இயற்றிய நூல்க

ளெல்லாம் பயனற்றவை என்று கூறிக்கொண்டு நாம் பய னற்றவர்களாகப் போய்விடக் கூடாது.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் —குறள்

என்ற கருத்தை ஏற்று நடக்க முன்வரவேண்டும். நமக்குள்ளேயே பகைமை பாராட்டித்தான் இன்னும் நம் நாட்டைப் பாழாக்கிக்கொண்டு வருகிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எதிலும் வெறி கூடாது; வெறி புகட்டவல்லது எதுவாக இருந்தாலும், அவை யாவும் அறிவுக்குப் புறம்பானவை என்பதை உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். சீரழிந்துகொண்டு இருக்கின்ற சமுதாயத்தைப் பண்டைய உள்ளம் கண்ட கருத்தை மேற்கொண்டு ஒழுக முன்னேக்கி வரவேண்டும். அதுவே நம்மை நாம் திருத்திக்கொள்ளவும் தெளிவு பெற வும் வழி செய்யும்.

## அறிவின் வேலை

எந்தையும் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே —பாரதி கவிதை

பாரதியார் கண்டார் பண்டையத் தமிழர் தம் சிந் தையை—அதன் மறு பிறப்பாகத் தோன்றிய எண் ணத்தை—அந்த எண்ணத்தால் பிறந்த குழந்தைகளை, நூல்களின் வாயிலாகக் கண்டார்; பாடினர்.

ஆமாம்! எத்தனையோ வளம் நிறைந்த கருத்துக்கள். மனிதன் மாண்புடன் ஒழுகவேண்டும் என்பதற்காக எழுந்த விழுமிய கருத்துக்கள்; உள்ளத்தைக் கொண்டு உணருகிறான்; உணர்ந்ததை எண்ணிப் பார்க்கிறான்; ஒரு முடிவுக்கு வருகிறான். அதுவே அறிவு. உள்ளத்தால் உணர்ந்த பின்னர்தான் அறிவெனும் வெளிச்சம் வீசத் தொடங்குகின்றது. அதன் அடிப்படையில் பலவகையான கருத்துக்கள் பிறக்கின்றன. அந்த அகமும் அறிவும் ஒருங்கே பெற்று இருந்தவர்கள், நமது மூதாதையர்கள்.

அவர்கள் நல்லதைச் செய்யவேண்டும் என்பதற்காகவே வாழ்ந்தார்கள். அதுவே பிறந்ததின் பயனாகக் கொண்டு பல பனுவல்களை இயற்றினார்கள். எது எது தவறோ, அதையெல்லாம் திருத்த வேண்டும் என்பதற்காகவே எழுதிப் போனார்கள். அதைத்தான் இன்று பார்க்கிறோம்.

புறநானூற்றுப் புலவரொருவர் தெரு வழியாக வந்துகொண்டிருக்கும்போது அந்தத் தெருவின் இரு மருங்கிலும் இரு காட்சிகளைக் கண்டார். ஒன்று, அழுகையொலி; மற்றொன்று மணவொலி. இந்த இரண்டு காட்சிகளையும் ஒரே தெருவில் கண்டார். அவருக்கு வாழ்க்கையின்மீது சற்று வெறுப்புத் தோன்றத் தொடங்கியது. அதற்கடுத்தாற்போல இன்னொரு தெருவின் வழியாக வருகிறார். பொருளீட்டி வரச் சென்றிருந்த தலைவன் திரும்பி வந்ததைக் குறித்து அவனது மனைவி, மக்கள், சுற்றத்தார் அனைவரும் மகிழ்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர். அதற்கு எதிர்வீட்டில் ஒருத்தி தன்னை விட்டுப் பொருளீட்டி வரப் புறப்பட நினைத்த தலைவனைக் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடத் தொடங்குகிறாள்:

''செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை''

என்கிறாள். அச்சோகக் காட்சியைக் காண்கிறார். உடனே விர்ரென நடந்து, ஒரு பெரும் மரத்தினடியில் அமர்ந்தார். கண்ட காட்சி அனைத்தையும் கொண்டுவந்து மனக் கண்முன் நிறுத்துகிறார். உலகில் நடைபெறும் இந்தக் கொடுமையை ஒழிப்பது எப்படி என்று தமக்குள் கேட்டுக் கொள்கிறார். சற்று நேரத்திற்கெலாம் விடை வெளியாகிறது. எல்லோரும் திருந்தினால்—மனத்தை மாற்ற அறிந்துகொண்டால் உலகம் இனிதாகத் தோன்றும் என்பதைக் கண்டார். இன்பமும் துன்பமும் மன நிலையைப் பொறுத்தே தோன்றுகின்றதென்பதை அறிந்தார். அறிவிக்க முனைந்த அகத்திற்கு நன்றி செலுத்தி ஓலையும் எழுத்தாணியுமாக உட்கார்ந்தார். எழுதினார். இதோ அந்த வரிகள்:

சேர் இல் நெய்தல் கறங்க ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்

*புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்*
*படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்*
*இன்னாதுஅம்ம! இவ் வுலகம்*
*இனியகாண்க இதன்இயல்பு உணர்ந்தோரே*
—*புறநானூறு*. 194.

நாட்டிலே நடக்கும் நன்மையும் தீமையும் எதனால் உண்டாகின்றன—என்று நினைத்த மாத்திரத்திலே உண்மை அறிய அறிவு வேலை செய்யத் தொடங்கியது. கண்டார், தெளிந்த தெளிவை! இதுவே அறிவின் வேலை. எங்கே—எது நடக்கின்றதோ, அதைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து நிற்பதே அறிவெனக் கருதினர். உண்மையும் அதுதான்! வள்ளுவரும் சென்ற இடத்தில் மனதைப் போகவிடாமல், தீமையானவற்றிலிருந்து விலகித் தன்னைத் தற்காத்துக் கொண்டு, நன்மையான வற்றிற்கு அம்மனதைச் செலவிடுவதே அறிவு என்றார்.

*சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்ப தறிவு* —*குறள்*

இம் முறைக்குப் புறம்பானவை யெல்லாம் அறியாமையேயாகும். அறிவின் வேலையானது தன்னை முதலில் திருத்திக்கொண்டு, பிறரைத் திருத்த வல்லது. அதுதான் சான்றோரின் வேலையாக இருந்தது.

**கற்பு**

'கற்பு என்ற சொல்லின் சிறப்பைக் கூறவந்த தொல் காப்பியனார்,

*உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்*
*செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தது* —*தொல்.*

என்று பொருளழுந்தக் குறிப்பிடுகிறார். என்னே, அழகு! என்னே, அழகு! கற்பின் உயர்வைக் காணவந்த தொன்மைப் புலவன் உயிரையும் நாணத்தையும் கண்டு, அதைவிட உயர்ந்து நின்று துலங்குவது கற்பு என்று சொல்லுதல் நினைத்து நினைத்து இன்புறத் தக்கவைகளுள் ஒன்றாகும்.

இவ்வுலகின்கண் பொன்னையும் பொருளையும் விடப் பெரிதாகக் கருதப்படுவது உடலுள் அடங்கி வாழும்

உயிர். ஆயினும், உயிரைக் காட்டிலும் தலையானதாகப் போற்றப்படுவது—காக்கப்படுவது நாணமாகும். அத் தகைய நாணத்தைவிடப் பெரிதெனக் கருதுவது கற்பாகும். இதைத்தான் தொல்காப்பிய வரிகள் விளக்கு கின்றன.

இத்தகைய ஒப்புயர்வற்ற கற்பைப் பற்றி விளக்க வந்த உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர், *கற்பு என்ற சொல்லுக்குக் கற்பிக்கப்படுவதெனப் பொருள் கூறியுள் ளார். அங்ஙனம் கற்பித்துக் கொண்டு ஒழுகுதல் என்னை? அதை, ஈண்டுக் காண்போம்:

ஒருவனும் ஒருத்தியும் விழிகளால் சந்தித்து, உள்ளத் தால் ஒருமனப்பட்டு, ஒத்த காதலராகித் திருமணம் புரிந்துகொண்டு வாழ்க்கையைத் துவக்குவதற்குமுன் அவ் வாழ்க்கையை நடத்துவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகளை நன்குணர்ந்து கொள்ளுத லாகும். அஃதே கற்றதின் முழுப்பொருளாகும். அவ்விதம் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு—வாழ்க்கைக்குரிய விதிமுறைகளைத் தெரிந்துகொண்டு—வாழ்வதே பெரு வாழ்வெனக் கருதினார்கள். பனுவல்களும் இதைத்தான் பெரிதாகக் கொண்டு புகழ்ந்தேத்துகின்றன.

இக்கற்பு எவருக்குரியது? இந்த வினாவிற்கு விடை யாக வருவன ஆண்பாலும் பெண்பாலுமாகும். பழங்கால ஆடவரும் பெண்டிரும் தம் காதலரைத் தவிர வேறொருத் தரையும் நினையாக் கற்பின் திறனாக விளங்கினார்கள். ஆயினும் யாவரும் ஒழுக்கத் திண்மையோடு வாழ்ந்து காட்டினர் என்று சொல்லுதற்கில்லை. ஒரு சிலர் ஒழுக்கத் திலிருந்து பிறழ்ந்து நடந்திருக்கின்றனர் என்பது இலக் கியங்களை ஆழ்ந்து காண்பவர்க்கு இனிது புலனாகும்.

பொதுவாகக் குறளை உற்று நோக்கும்போது, அவற் றில் 'பிறனில் விழையாமை', 'வரைவின் மகளிர்'—என்ற இரு அதிகாரங்களைப் பார்க்கிறோம். அக்காலத்தவரும் ஏதோ

---

*கற்பு: கற்பிக்கப்படுவது. திருமணமாகியவர்கள் நடந்து கொள்ளும், ஒழுங்குமுறையைக் குறித்துப் பெரிய வர்கள் மொழிவதைப் பற்றிப் பொதுவாக வந்ததொரு சொல்,

ஒரு வகையில் தவறி இருக்கின்றனர் என்பது முடிபாகின்றது. இல்லையென்றால் இரு அதிகாரங்களிலும் ஆடவர்களுக்கு அறிவுரை கூறும் வகையில் அமைக்கப்பட வேண்டியதில்லை. எனவே, இவற்றிலிருந்து பெரும்பான்மையோர் தவறவில்லையெனினும் சிலர் ஒழுக்கத்திற்குப் புறம்பான வழியில் பிறழ்ந்து நடந்திருக்கின்றனர் என்பது முடிந்த முடிபு. ஆகவேதான்,

'பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்' —குறள்

என்று பிறனில் விழையாமையிலும்,

'பொருள்பெண்டீர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ அற்று' —குறள்

என்று 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்திலும் மிக மிக வன்மையாகக் கண்டிக்கிறார். அத்தகைய சிறப்பமைந்த கற்பைப் பற்றிப் புறநானூற்றில்,

கடவுள் சான்ற கற்பு—198
வடமீன் புரையுங் கற்பு—122

என்று, அதன் சிறப்பு உணர்த்தப்படுகின்றது. இவ்வித உயரிய கற்பின் திறனை உணர்ந்த அக்கால ஆடவரையும் பெண்டிரையும் ஈண்டுக் காண்போம்.

## ஆடவர் கற்பு

இன்றைய தமிழுலகம் பெண்ணிற்கு மட்டும் அணிகலனாக விளங்குவதுதான் கற்பு என்று தவறான முறையில் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றது. அத்தகைய கற்பு ஆடவருக்குத்தான் உரியது என்பது, உணர்ந்து கொள்ள வேண்டியவற்றுள் ஒன்றாகும்.

'அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்'

இக் குறளின் கருத்தை ஆழ்ந்து காண்மின்! கண்டுணர்ந்து தெளிமின்! பிறருக்கு நிச்சயித்துவிட்ட பெண் மீது பற்று வைக்காதவனே இயல்போடு, இல்வாழ்க்கை நடாத்துபவனெனக் குறளின் வாயிலாக வெளிப்படுத்து

கிறார். அங்ஙனம் ஒழுகுதலே கற்பாகும் என்பது அவரது கருத்தாக விளங்குகின்றது. அதுமட்டுமல்ல, காதல் கொண்ட ஒருவனும் ஒருத்தியும் அங்ஙனமேதான் நடந்து கொள்ள வேண்டும். அஃது, யாவற்றிலும் தலையாயதாக விளங்கக் கூடியது. அத்தகைய கற்பொழுக்கத்தைப் பற்றி உணர்த்த வந்த புறநானூற்றுப் புலவர் மிக அழகாகக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

சோழன் நலங்கிள்ளி, பகைவர்மாட்டுக் கொண்ட வெஞ்சினத்தால், 'பகைவரைப் புறங்காட்டி ஓடச்செய்ய வில்லையேல் காதல் பற்றி இன்னதென்றுணராத ஒருவன், பொதுமகளிரோடு கூடி முயங்குவதை ஒத்ததாகட்டும், என்னுடைய நிலைமையும்!' என்று சூளுரைத்துப் பாடுகிறான். என்னே, மன்னன் கண்ட கற்பின் திறன்! பொய்ம்மை முயக்கத்தை இகழ்ந்துரைத்து கற்பிற்குச் சிறப்பிடந்தருஞ் செயலென்னே!

தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே —புறநானூறு

அதுமட்டுமன்று, பூதப்பாண்டியன் என்ற அரசன் வேற்று நாட்டான் தன்னுடைய நாட்டின்மீது படையெடுத்து விட்டான் என்ற செய்தியைக் கேட்டதும், 'வஞ்சினங்கொண்ட அந்த நெஞ்சழுத்தக்காரனைத் தேரோடு புறமுதுகிட்டு யான் ஓடச் செய்யவில்லையேல், என் மனைவியை விட்டுப் பிரிவேனாக !' என்று கூறிகிறான்.

என்னொடு பொருதும் என்ப அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்புறங் காணே னாயின் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக —புறநானூறு

தன்னுடைய மனையாளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே 'இவளினும் பிரிக' என்று கூறும்முகத்தால் தோன்றும் உயர்வான கருத்தை நோக்குங்கால், அவனது ஒழுக்கத்தின் உயர்வினைக் கற்புக்குத் தரும் மதிப்பினை நன்குணரக் கூடும். இவ்வித ஒப்புயர்வற்ற மன்னர்களின் ஒழுக்க மேன்மையைக் காணுங்கால் இழுக்குத்தேடும் மக்களை

மிகுதியாகக் காண்பதேது? ஆகவேதான் பெரும்பாலான ஆடவர்கள் கற்பின் திண்மையை உணர்ந்து ஒழுகி வந்தனர் என்பது இலக்கிய வரிகளால் நன்குணரக் கூடும். அத்தகைய கற்பைப் பற்றி *மாணிக்கவாசகர் நயத்தோடு விளக்கும் ஒரு பாடலைக் காண்போம்.

தலைவி தலைவனுடன் சென்றபின் தலைவியின் செவிலித்தாய் ஒருத்தி, வறண்ட மணற்பாங்கின் வழியாகத் தன் மகளையும், அவள் காதலனையும் அழைத்து வந்து திருமணம் நடத்தி வைக்க வேண்டும் என்ற கருத்தோடு அவ் வழியாகத் தேடிச் செல்கிருள். சென்றவள் கண்டாள், பெரியதொரு ஏமாற்றத்தை என்ருலும் தன் மனத்திலே உள்ள ஐயத்தைக் கேட்டுப் போக்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு எதிரில் வந்த இருவரை அணுகுகிருள்.

'' ஐயா ! நும்மையொத்த என் மகளும் பிறன் மகன் ஒருவனும் இவ்வழியே சென்றதை நீங்கள் பார்த்தீர்களா ?'' என்கிருள், அவள்.

''அன்னையே! நான் ஒருவனைத்தான் கண்டேன். புலியூரிலே உள்ள மலைகளில் வாழும் சிங்கத்தையொத்த கெம்பீரமும், பொன்னிறத்தையொத்த அழகும், வீரத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இரு தோள்களையுங் கொண்ட ஒருவனைத்தான் கண்டேன் ; உடன் யார் சென்ருர் யென்பதை யானறியேன். வேண்டுமானுல் என் இல்லக் கிழத்தியைக் கேட்டுப் பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டுத் தன் அன்புக் காதலியை நோக்கி, '' தூண்டா விளக்கணையாய்! அன்னை ஏதோ கேட்கிருள். உனக்கு ஏதேனும் தெரிந்திருந்தால் சொல்!'' என்ருன். அவளும், தான் ஒருத்தியைத்தான் கண்டேனே யொழிய உடன் சென்றவர் இன்னுரெனெ யான் அறிகிலேன் என்னும் பொருட்படச் சொல்லுகிருள். மீண்டும் சென்றவரைத் தேடிச் செல்கிருள், செவிலி.

---

* மாணிக்கவாசகர் காலம் மூன்ரும் நூற்ருண்டு என்றும் ஆருரும், ஏழாம் நூற்ருண்டெனவும் இருபிரிவாக ஆராய்ச்சியாளர் மொழிவர்.

*மீண்டாரென உவந்தேன் கண்டு நும்மையும் மேதகவே*
*பூண்டா ரிருவர்முன் போயின ரேபுலி யூரெனைநின்(று)*
*ஆண்டான் அருவரை ஆளியன் ஞானைக்கண் டேனயலே*
*தூண்டா விளக்கணை யாயென்னை யோஅன்னை*
*[சொல்லியதே*
—திருக்கோவையார்—244

சுவையான காட்சி! பொருள் நிறைந்த அகத்துறைப் பாடல்! மாணிக்கர் தந்துவிட்டுச் சென்ற பெருமொழி! இத்தகைய மனம் படைத்தவன் தான் கற்புநெறியினின்று பிறழாதவனுவான். அத்தகையவனைத்தான் இலக்கியப் பனுவல்கள் என்றென்றும் கொண்டாடுவன. அவன் உண்மைக் காதலன். மற்றெல்லாம்......சொல்லாமலே விளங்கிவிடும்! அந்த அளவிற்குக் கற்பை ஆடவர் உலகம் போற்றிக் காத்தது. படித்தவர் முதற்கொண்டு படியாத பாமரர் வரையில் அதைக் கண்டு போற்றிப் புகழ்ந்து வழுவாது நடந்தனர். இன்றோ, படித்தவர் தாம்—நாட்டுக்கு அறிவுரை புகட்ட வரும் மனிதர் தாம் தூய்மையைப் போற்றிக் காக்கத் தெரியாது வாழ்கின்றனர். இவர்களையும் இதே நிலமகள் தான் சுமந்து கொண்டு இருக்கிறாள்.

**மகளிர் கற்பு**

*பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை உண்டாகப் பெறின்.*

பெண்ணிடத்தில் பெருமையாக உள்ளது எது? அஃதென்ன? இக்கூற்றிற்கு, 'கற்பினுடைய திண்மை' விடையாக விளங்குகிறது. அதோடு, அப்பெண் எத்தகையவளாக இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக,

*தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

என்ற வரிகளால் நன்கு எடுத்தியம்புகிறார் செந்நாப் புலவர். கற்பினின்று பிறழாது தன்னைத்தானே காத்துக் கொள்ளும் திறன் உடையவள் தான் பெண்ணென்பதும், கணவனின் மனங் கோணாத வகையில் அன்பைப் பரிமாறி

இல்லறம் செழிக்கச் செய்யும் வகையிலே நற்குணங்களைப் பெற்றிருப்பவள்தான் வாழ்க்கைக்கேற்ற துணைவியா வாள் என்பதும் குறளின் கருத்து. உண்மையும் அதுவே யாகும். ஒருவனுக்குத் துணையாக வருபவள், அவன் மனத்திற்கேற்றவாறு தன்னை ஆளாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டு வாழ்க்கையை நடாத்த முடியும். இல்லை யேல், அவ்வாழ்க்கையில் போரும் பிணக்குந்தான் அணி செய்யும். ஆகவேதான் வாழ்க்கைக்குத் துணையாக வருபவள், அவ்வாழ்க்கைக்குரிய முறைகளைக் கற்பித்துக் கொண்டு ஒழுகுதல்வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் தன்னுடைய கணவனையன்றிப் பிறரைப் பார்ப்பதும், காதல் மொழி பேசுவதும் பெருங் குற்றமாகும். இவை யாவும் இல்லாதவளே பெண். அவளே கற்பின் திறனை யறிந்தவள்; கற்பரசியாக வாழ்பவள். அத்தகைய கற் பரசியை சமீபகாலத்தில் மறைந்த வேதநாயகம் பிள்ளை யவர்கள் கவிதையின் வாயிலாக நமக்குக் காட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

*ஓவியர்நீள் சுவர்எழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்*
*தேவியையான் அழைத்திட ஆண்சித்திரமேல் நான்*
*[பாரேன்*
*பாவையர்தம் உருவெனில்நீர் பார்க்க மனம்பொறேன்*
*[என்றுள்*
*காவிவழி மங்கைஇவள் கற்புவெற்பின் வற்புளதால்*
*—நீதிநூல்*

வெளிச் சென்றிருந்த தலைவன், ஒரு செய்தியோடு வீட்டினுள் நுழைகிறான். அவனைக் கண்ட இல்லக்கிழத்தி தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு உணவைப் பரிமாறத் தொடங்குகிறாள். கடமைகளை முடித்துக் கொண்டு உணவருந்த அமருகிறான். அப்போது, தான் கொண்டு வந்த செய்தியைத் தலைவியிடம் கூறும் நேரம் இதுவென உணர்ந்த தலைவன் பேச்சு தொடங்குகிறான்.

''என் இன்ப விளக்கே! வரும்வழியில் ஒரு செய்தி யைக் கேள்வியுற்றேன்'' என்கிறான், அவன்.

''என்னங்க, அந்தச் செய்தி?''

''ஒன்றுமில்லை! ஓவியனொருவன் தன் கைத்திற மையை மன்னனின் கலைக்கூடத்தில் காட்டியிருக்கிறானும். ஒன்றல்ல; இரண்டல்ல; பல ஓவியங்களாம்! பார்க்க இனிய விருந்தாம்.........வருகிறாயா, பார்த்துவிட்டு வருவோம்!''

''அப்படிங்களா .....ஆமாம்......அங்கு என்னென்ன ஓவியங்கள் வரையப் பட்டிருக்கின்றனவாம்?''

''கண்ணைப் பறிக்கும் ஆண் பெண் உருவங்கள்! கலைஞன் தந்த புதிய செல்வங்கள்...இன்னும் பலவாம்!''

''ஐயனே! அப்படியானால், அந்த இடத்திற்கு நாம் இருவருமே போகக்கூடாது?''

''காரணம்?''

''அன்பரே! அங்கு ஆண் உருவம் வரையப் பட்டிருந் திருந்தால் அதை நான் பார்க்கக்கூடாது. பெண் உருவத் தைத் தீட்டியிருந்தால் அதை நீங்கள் பார்க்கக் கூடாது. ஆகவேதான் நாம் இருவருமே போகக்கூடாது என் கிறேன்'' என்று நயம்படக் கூறுகிறாள். அவனும் அதன் உட்பொருளை உணர்ந்து மனத்தை மாற்றிக்கொள் கிறான். இந்த அடிப்படைக் கருத்தை விளக்குவதே மேலுள்ள வரிகள். என்னே, கற்பின் உயர்வு!

சங்க காலத்துப் பாடலாக விளங்கும் குறுந்தொகை யில் கணவனுடைய இன்பமே தன்னுடைய இன்பமெனக் கருதும் ஓர் இல்லக்கிழத்தியின் மனப்பண்பை காண் போம்.

இல்லக் காதலி ஒருத்தி, பிறர் செய்யும் உணவால் தன் கணவனுக்குச் சுவை குன்றிவிடுமோவெனக் கருதி, அவளே அத்தொழிலை மேற்கொள்ளுகிறாள் செங்காந்தள். மலர் போன்ற மெல்லிய விரல்களால் கட்டியாகவுள்ள தயிரைப் பிசைந்து கொண்டிருக்கும் வேளையில் தன்னு டைய தலைவன் வரும் நேரம் அணுகிவிட்டதே என்று உணர்ந்து மிகத் துரிதமாக வேலைகளைச் செய்யத் தொடங் குகிறாள். அப்போது ஆடை நெகிழ்தலை உணர்ந்தும், எங்கு வந்துவிடப் போகிறாரோ என்ற ஐயத்தோடு ஆடை யிலே துடைத்துக்கொண்டு, அவ்வாடையை உடுத்திக்

கொள்கிருள். அத் தயிரினைத் தாளிக்கச் செல்கிருள். புகை எழுகின்றது. என்ருலும் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு தாளித்தால் பதம் குறைந்து போகு மென்று கருதித் திரும்பாது, அதனைத் துழவி நறுமணத் தோடு இறக்குகிருள். அவ்வேளையில் தன் உடல் நலம் பெரிதெனக் கருதிஞளில்லை; தலைவனின் இன்பமே தன்னின்பமெனக் கருதிஞள்.

*முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்*
*குவளை உண்கண் குய்ப்புகை கமழத்*
*தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவன் உண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதன் முகனே*
—குறுந்தொகை (167)

தலைவன் கொள்ளும் சுகமே தன் சுகம் என்று கொள் பவள் கற்பினுடைய எல்லையில் நிற்கிருள். அங்குப் பூசல் நிகழ்வதில்லை. ஒத்த அன்பே துலங்குகின்றது. கண்ணகி தன் கணவன் கோவலன் கொலைக்களத்தில் உயிர் துறந் தான் என்ற செய்தி எட்டியதும்,

*"கள்வனே வல்லன் கணவனென் காற்சிலம்பு*
*கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்ருரே......"*
—சிலம்பு

என்று பதை பதைத்துக் கூறிப் பாண்டியனிடஞ் சென்று நீதியை நிலைநாட்டியதின் நோக்கமென்னை? அதோடு,

*"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்*
*பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்*
*ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையையும்"*

எனச் சூளுரைத்து, உளங் கொதித்து எழுந்ததின் விளைவென்னை? யாவும் கற்பின் திறனேயாகும்.

இன்று இந்தக் கற்பு எங்கே என்று பார்க்கும்போது நாம் இந்த நவநாகரிக உலகில் பிறந்ததைக் காட்டிலும் ஈருயிரம் ஆண்டுகட்கு முன்னே பிறந்திருந்தால் எவ் வளவோ நன்ருக இருந்திருக்கும் என்ற எண்ணமே தலை யெழுந்து நிற்கும். அன்று அடங்கி வாழ்தலே சிறப்

பெனக் கருதினர். இன்றோ, அடக்கமின்றி அலைந்து வாழ்தலே சிறந்ததெனை இரு சாராரும் கருத முனைந்து விட்டனர். ஒருத்தியோடு ஒருவனும், ஒருவனோடு ஒருத்தியும் வாழ்தலே வாழ்க்கையென எண்ணினர். இன்றோ, பலரோடு வாழ்வதே இனிதெனப் பறைசாற்றும் வண்ணம் திரிகின்றனர். இந்நிலை மாறவேண்டும். மாறும் வரையில் மாண்பில்லை. அதற்கான வழியினைக் கடைப் பிடிக்கப் பண்டைய உள்ளம் காட்டிய வழியைக் கடை பிடித்து ஒழுக வேண்டும். சமீப காலத்தில் இருந்து பழந்தமிழ் உள்ளங் கண்டதை உணர்ந்த பாரதியார்,

நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன் மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு

என்று போற்றிப் பாடிய பாடலின் கருத்தை இனியேனும் மேற்கொள்ள வேண்டும்.

**மக்கட்பேறு**

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்ககட்பே றல்ல பிற. —குறள்

என்பது வள்ளுவர் வாய்மொழி. மனிதர்கள் எதை எதையோ பெறுகின்கிறனர். அவற்றையெல்லாம் உயர்ந்தனவெனவும், பெருமைப்படத்தக்கனவெனவும் கூறுகின்றனர். வள்ளுவர், அவையெல்லாம் சிறந்தன வல்ல என்பதைச் சுட்டிக் காட்டவேதான், 'மக்கட்பே றல்ல பிற' என்று மொழிந்துள்ளார். ஒருவன் எதையும் பெறலாம்; எதையும் வேண்டாமென ஒதுக்கித் தள் ளலாம். ஆனால் அறிவறிந்த மக்கட்பேறு ஒதுக்கத் தக்க தல்ல; போற்றிக் காகக் வேண்டிய பெருஞ்செல்வம். ஒருவன் பெறத்தக்கதும் அதுவே. அதனால் சமூகத்திற்கும், ஏனைய துறைகளுக்கும் நன்மையேயாகும். இவ்வுலகில் பேரின்பம் உண்டெனில், அது, பால்மணம் மாறாப்பச்சிளங் குழந்தையிடத்தே தமிழ் உள்ளம், கழி பேரின்பம் கண்டதுதான்!

ஒருவன், தன் குழந்தையை அருகில் வைத்துக் கொண்டு உண்ணும் பேறு கிடைக்கப் பெறவில்லை

யெனின், அவன், இத் தொல்லுலகில் எதைத்தான் பெற்றான்? செந்தாமரை போன்ற அழகிய சிறு கைகளால் சோற்றைக் கிண்டியும், கீழே சிதறச் செய்தும், மேலே வாரி இறைத்தும் செய்கின்ற காட்சி, கண்டு களிப்புறத் தக்கதாகும். அக் குழந்தை குறுகுறுவெனத் தளர்நடையிட்டு நடப்பதும், சிறு கைகளை நீட்டுவதும், தலையை அடிக்கடி அசைப்பதும், உதட்டை நெளித்தபடி பார்ப்பதும், கன்னங்குழியச் சிரிப்பதும் என்றென்றும் உவகை பெருக்கச் செய்யவல்லன. அத்தகைய உவகை, அனுபவம் நிறைந்த அறிவுடை நம்பி என்னும் பெரு மன்னனைக் கவர்ந்தது என்பதைப் புறநானூற்றுக் காட்சியொன்று நமக்கு விளக்குகின்றது.

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே —புறம்—188

என்பதாகும்.

இல்வாழ்க்கை நடாத்தும் தலைவனும் தலைவியும் 'ஊடல்' என்ற வார்த்தைக்கு இலக்காகி இருக்கும்போது கூடக் குழந்தையின் மழலைச் சொற்களே அவர்களை ஒன்று கூட்டி வைப்பன. அதற்கு யாழோசைபோல இசை யின்பம் கிடையாது. காலத்திற்கேற்றதாகவும் இராது. சொல்லும் சொற்களும் தன் முழுவுருவமும் குலைந்து பொருளும் விளங்காது. ஆயினும், அக் குழந்தையைப் பெற்ற பெற்றோர் சொல்ல முடியாத இன்பத்தை அடைவர். அம் மழலைமொழியில் தம்மை மறந்து கிடப் போர் குழல்தான் இனிது; யாழ்தான் இனிது என்று கூற மாட்டார் என்ற கருத்துக் கொண்ட ஒளவை மூதாட்டி யார் எழுதியுள்ள செய்யுள் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கது.

யாமொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை —புறம்-92

இவ்வித உண்மையை—உணர்ந்த கருத்துக்களைத் தெரிவிப்பவரே ஆன்ஞேராகின்றனர். இத்தகையோரால் தான் உலகம், உண்மை என்ற சொல்லுக்கு இடமளித்து இனிது நடந்து வருகின்றது. அறிவை, இன்பத்தால் மயக்கும் மக்களைப் பெருதவரின் வாழ்க்கையே பயனற்றவை என்பதற்குத்தான்,

மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே

எனப் பாடிப் போந்தனர். இவை அனைத்தையும் உணரும் போது தமிழர் தம் மனத்தை—பண்டைய உள்ளத்தை—தெள்ளத் தெளியக் கண்டு களிப்புறலாம்.

## கடமை

இனி, பிறந்த மக்களால் ஏற்படும் நன்மைகள், அவர்கள் செய்ய வேண்டிய கடமைகள்பற்றி ஆராய்வோம். மக்கட் செல்வம், பெருஞ் செல்வமென மொழிந்த ஆன்ஞேர், அக் குழந்தை நல்ல முறையில் வளரவும், நாட்டுப்பற்று மொழிப்பற்றுப் பெறவும், யார் யார் என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமென்பதை ஒரு பெண் புலவரின் நெஞ்சம் கருதிற்று. அதன் விளைவே,

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்ருே ஞக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே —புறம்

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' என்னும் முதலடியில் பொன்முடியார் என்ற செந்தமிழ்ச் செல்வியாரின் சீரிய கருத்து, நமக்கெல்லாம் மறைந்து போன உணர்ச்சிக்குப் புதுமெருகிட்டு, நம்மை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இல்லந்திருந்துமேயாஞல் நாடு திருந்தும் என்கிற உயரியகருத்து, அவருடைய முதலடியில் பொதிந்திருப்பது ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கது. உலகம் உயர வேண்டும் என்ற

நல்லெண்ணம் அனைவருக்கும் உண்டு. ஆனால், அந் நினைவுக்கு ஏற்றாற்போல் செயல் உருவாகிறதாவென்றால் அதுதானில்லை. அஃது, எங்கோ—எப்படியோ மறைந்து நிற்கிறது. அதை, நாம் பார்க்க வேண்டுமானால் மங்காத புத்துணர்ச்சி மிக மிகத் தேவை. அந்தப் புத்துணர்ச்சி வருகின்ற வரையில் மறைந்து நிற்கும்—நம்மையெல் லாம் விட்டுப் பிரிந்திருக்கும் செயல், ஒன்று சேர்ந்து உறவாடுவது அரிதுதான்.

'செயல் ஏன் பிரிந்திருக்கிறது?' என்ற வினா சிலருக்கு இயல்பாக எழலாம்; பலருக்குப் புரிந்துவிடலாம். ஆனால் புரியாத சிலர், சற்றுச் சிந்தனைக்கு இடங்கொடுத்துப் பார்ப்பார்களானால், நம்முடைய புறக்கணிப்பு முறை யால்தான் என்பது தெள்ளத் தெளிய விளங்கிவிடும். புறக்கணிக்க வேண்டியவைகளைப் போற்றி வளர்ப்பதை விட்டுவிட்டு, மறைந்திருக்கும் செயலை உருவாக்க முற்பட வேண்டும். அவ்விதம் செயலை நோக்கி நம்முடைய எண்ணம் பதிந்துவிட்டால் தத்தம் கடமையை உணர்ந்து நடக்கும் நிலைமை தானே வந்தெய்தும். அவ்விதக் கடமையை, அந்நாளைய தாய்மார்கள் உணரவேண்டு மென்றுதான் அறிவு அறிந்த நல்ல பிள்ளையைப் பெற்று, போற்றி வளர்க்க வேண்டுவது, 'என் கடமை'யென, முதற்கடனையாகத் தன்னையே அடிப்படையாக வைத்து எழுதிச் சென்றுள்ளார், பொன்முடியாரென்னும் பெண் பாற்புலவர். தன்னுடைய கடமையை முடித்துக் கொண்டவுடன், அவனை ஈன்ற தந்தையின் கடமையைப் பற்றி விளக்க முற்படுகிறார்.

இத் தொல்லுலகில் ஒருவனுக்கு நிலைத்து நின்று வழிகாட்டுவது, அறியாமைக்குச் செல்லும் நேரத்தில் அவனைத் திருத்தி, நல்ல பாதைக்கு அழைத்து வருவது அறிவு. ஆனால், அவ்வறிவு பெறுவதற்கு முதற்காரண மாய் விளங்குவது கல்வியேயாகும். அக் கல்வியைப் பயிலுங் காலம் இளமை. அதனாலேதானோ, என்னவோ ஔவையாரும், 'இளமையில் கல்' என்று குறிப்பிட்டுள் ளார். அவ்விளமையில், தாயின் அணைப்பில் வளர்ந்த பிள்ளைக்குத் தந்தை செய்ய வேண்டிய கடமை, அவனைக்

கல்விச் செல்வத்திற்கு உரியவனுக ஆக்கி வைப்பதென்று இரண்டாவது வரியில் விளக்கியுள்ளார். ஆகவேதான் வள்ளுவரும், ஒவ்வொரு தந்தையும் தன் மகனுக்குச் செய்ய வேண்டிய பேருதவியானது, கற்றவர் கூடிய அவையில், தன் மகன் மேம்பட்டிருக்கும் வகையில், அவனைக் கல்வியறிவு உடையவனுக்குதல் வேண்டுமென்று வரைந்துள்ளார்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்புச் செயல். —குறள் 67.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும், தாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி நன்கு உணர வேண்டும்; உணர்ந்தவாறு செயலாற்ற முன் வரவேண்டும் என்பது அவரின் முதற் குறிக்கோளாக விளங்குவதை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். பொன்முடியாரின் செய்யுளில் புதைந்து கிடக்கும் கருத்துக்கள், அறிவுக் கண்கொண்டு பார்ப்பவர்க்குத் தெளிவாகப் புலனுகும்.

பெற்று வளர்க்கவேண்டிய தாயைக் கண்டார்; அவ்வாறு தாயின் அணைப்போடு வளர்ந்த பிள்ளையை—கல்வி அறிவு உடையவனுக்க வேண்டிய தந்தையைக் கண்டார்; மூன்ருவதாகக் கொல்லனைக் காண்கிருர்.

அன்னையின் அன்பாலும், தந்தையின் பெரு முயற்சியாலும் வளர்ந்த காளையானவன் கொல்லனின் துணைக்காக நிற்கிருன். அவனைப் போர்க்களத்திற்குப் பயன் படுத்தக் கொல்லன் வேல் வடித்துக் கொடுக்க வேண்டுமென விழைகிருர். ஈண்டு, எல்லோருடைய உறுதுணையும் இருந்தால்தான் காளையானவன் தன் கடமையைச் சரிவரச் செய்ய இயலும் என்பதையும், அவ்வாறு அவனை உயர்த்துதற்குரிய கடமைகளைச் செய்ய இவ்வுலகம் மறந்திருந்தால், அதனுல் நாட்டுக்குப் பெருந்தீமை விளையும் என்பதையும் விளக்குகிருர். இஃது, இன்றைய சமுதாயத்தோடு ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது எப்படித் தன் கடமையைச் செய்ய இந்நாடு மறந்திருக்கிறது என்று தோன்றச் செய்யும். உண்மையும் அதுதான். இன்றுள்ளோர், தம் மனத்தில் தவருகச் சில எண்ணத்தை உருவாக்கிக்கொண்டு, இந்த உலகத்தில் ஒரு சிலர்தான்

கடமை செய்வதற்கென்றே பிறந்திருக்கின்றனர் என்று கருதிக்கொண்டு இருக்கின்றனர். உண்மை அதுவல்ல; மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் ஏதேனும் ஒன்றைச் செய்கிறுன். கடமையும் அதுதான். ஆனுல், அந்தக் கடமையை ஒழுங்கான முறையில் செய்யத் தவறிவிடு கிறுன். அதோடு, நல்லதைச் செய்ய மறந்துவிடுகிறுன். அதனுல்தான், அவன் கண்களுக்குக் கடமையாகத் தென் படுவதில்லே. பிறர் கடமை செய்வதாகக் கருதுகிறுன். அதனுல் தன்னுடைய கடமையை மறந்துவிட்டு, எதை எதையோ எண்ணித் தேடித் திரிகிறுன். அதன் பயனுக நன்மை விளேகிறதாவென்றுல் அதுதானில்லே; இறுதியில் தீமையின் எல்லேயில்தான் அவனேக் கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றது. செய்வதொரு கடமையாக இருந் தாலும் தேவையற்றதைப் பெருக்கப் பயன்படும் சாதக மாகத்தான் முடிகிறது. கொல்லனுனவன் பழுத்த இரும்பை எந்த நோக்கத்தோடு வளேக்க நினேக்கிறுனே— எவ்வாறு எண்ணித் துணிவுகொண்டு செயலில் ஈடுபடு கிறுனே, அதற்குத் தகுந்தாற்போலவேதான் எல்லோ ருக்கும் பயன்பெறும் வகையில் உருவாகும். ஆனுல் எதையும் நினேக்காமல் நாமும் ஒரு பொருள் செய்தோம் என்று எண்ணி அலட்சியப் போக்கோடு வளேத்தால் யாது பயன்? தனக்கென ஓர் இலட்சியம் வகுத்துக் கொள்ளாத மனிதனிடம் எது இருந்தென்ன, இல்லாமற் போனுல்தான் என்ன? கடமையும் வாழ்க்கை முறையும் அப்படித்தான். நாளே வரும் பலாப்பழத்தைவிட இன்று வரும் காளக்காயே மேலானது என்ற அளவில் மனம் பண் படவேண்டும். வருங்காலத்தில் நல்ல நிலேயில் நம்மால் வரமுடியும் என்று மனத்தோடு வரைந்துகொண்டு நாளேக் கழிக்காமல், 'உள்ளதைக் கொண்டு தன் கடமை யைச் செய்பவனே உயர்ந்தோன்; எதிர்காலத்திலும் அவனே தகுதியும் சிறப்பிடமும் பெற்று வாழத் தலேப் படுகிறுன்.' இந்த உண்மை பலருக்குப் புரிவதில்லே; அப் படிப் புரிந்தாலும் மின்னல்போலப் பளிச்சிட்டு மறைந்து விடுகின்றது. அந்நிலேமை மாற வேண்டும். அதன் பிறகே நாட்டுக்கும்—நாட்டைச் சூழ்ந்துள்ள மக்களுக் கும் நன்னிலே.

'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே'

என்ற அடியை, நான்காவது படிகளில் வைத்துள்ளார். 'மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி' என்ற வரியையும் பொன்முடியாரின் அடிகளில் புதைந்துள்ள கருத்தையும் நன்கு உணர்ந்து கொண்டோமானால் நமக்கு விடையாக, அரசனைப் பொறுத்தே காளையின் ஒழுங்கு முறையெனத் தெரிந்து கொள்ளலாம் என்பது குன்றின் மீதிட்ட விளக் கொளியாய் விளங்கும். ஆளுந் தலைவனின் கடமையும் அதுதான்.

நாட்டுக்குரிய முக்கியமான செய்திகளைக் கவனித்து, அதோடு ஒன்றிய காளைகளுக்குத் தக்கவாறு சட்டங்களை வகுத்து, அவற்றை ஒழுங்குபெறச் செய்வதன் மூலம் நாட்டில் ஒழுங்குமுறை சீரழிந்து போகாதவாறு பாது காத்தல், ஆட்சியில் அமர்ந்துள்ள அரசனின் தலையாய கடனாக இருக்கவேண்டும். இம்முறை அரசனுக்கு மட்டும் உரியதன்று; ஆட்சித் தலைவனுக்கும்தான். வள்ளுவரும்,

'படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு' —குறள்

என்று அரசனுக்குரிய ஒழுங்கு முறையைப் பற்றி விளக்கி யுள்ளார். 'படை, குடி' என்ற இரண்டு சொற்களையும் முதன்மையாக வைத்து, காளைக்கு நாடாள்வோர் காட்ட வேண்டிய முறைகளை விளக்குகிறார். அவ்வித ஒழுங்கு முறையை ஆட்சித் தலைவன் உண்டாக்கவில்லை யென்றால் வளர்ந்த காளையின் நிலைமை என்னவாகும்!

நாட்டை ஆள்வோன், அந்நாட்டை நீதி முறை யோடு நடாத்தி, அவரவருக்கும் செய்ய வேண்டிய முறை களை மனத்தில் வைத்துக்கொண்டு கடமைகளைச் செய்ய முற்பட வேண்டும். அவ்வாறு முற்படும் மன்னனையே, இயற்கையோடு இணைத்து மக்கள் போற்றுவாரென,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் —குறள்

என்று குறள் எடுத்துரைக்கின்றது. கடமைகளை விளக்கி வரும் பொன்முடியாரும் இத்தகைய கருத்துக்களையெல்

லாம் ஒன்று திரட்டித்தான், 'வேந்தர்க்குக் கடன்' என்று மிக மிக அழுத்தம் திருத்தமாகக் கூறி முடிக்கிறார்.

பலருடைய கூட்டு முயற்சியால் வளர்ந்த காளையின் கடமையோ,

'ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்கிறார். நால்வரின் கருணையால் வளர்ந்த அவன், தன்னிலையினை எண்ணித் தாய் நாட்டினைக் காக்கும் பணியில் ஈடுபட வேண்டும்; காத்து, உயர்த்தும் தொழிலில் ஊக்கங்கொண்டு உழைக்க வேண்டும் தாய் நாட்டிற்கு வரும் எத் தீங்கையும் தனதாகக் கொண்டு, தன்னுயிரையும் தருவதற்கு இசைபவனாக இருந்து அவன் உழைக்க வேண்டும். அவனே காளை; அவ்வாறு நாட்டுப் பற்றும். மற்ற ஏனைய பற்றும் உணர்ந்தவனே கடமையைச் செய்பவனாகிறான். அதுதான் காளையின் கடமையெனக் கூறுகிறார், பொன்முடியார். கடமைக்கு, அவர் தரும் முக்கிய இடத்தையும், அவ்வாறு கடமையை மறந்தொழிவதினால் ஏற்படும் இடையூறுகளையும் சுருக்கமாகச் செய்யுளின் வாயிலாக விளங்க வைத்துள்ளார், பெண்பாற் புலவர். ஒருவன் தன் கடமையைச் செய்யத் தவறினால்—அதிலும் நல்ல முறையில் செய்யத் தவறினால் நாட்டிற்குத்தான் குறை என்பதை அவரின் செய்யுளில் மறைந்திருக்கும் பொருளை இவ்விடத்து உணரத் தக்கதாகும். அவ்வாறு உணர்ந்து, நாடு உயர—நாட்டு மக்கள் உயர—ஒவ்வொருவரும் எண்ணிச் செயலாற்றும் நாள்தான், நாடு உயரும் நாள். அஃது, கடமையை உணர்ந்து செய்யும் நாளும் கூட. அப்போதுதான்,

'புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை'

என்று பாரதியார் குறிப்பிட்டுச் சென்றதை உணர்ந்து, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற ஆழ்ந்த பற்றுத் தோன்றும். இதைத்தான் பண்டைய உள்ளத்தின்கண் பாரதியார் கண்டார்.

காலையில் பயணமாகிறான். அவ்விதம் பயணமாவதற்கு முன்பு தன் அன்பு மனைவியோடு பல நிமிடங்கள் அளவளாவிவிட்டுப் பிறந்த மகனோடு கொஞ்சு மொழியிற் பேசி, அவன் காட்டும் குறுநகையும், கள்ளங்கபடமற்ற பார்வையும், மழலை மொழியும் கண்டு கேட்டுவிட்டு என்றும்போல் வேலைக்குச் செல்கிறான், ஒருவன்.

அவன், மாலை வேலையிலிருந்து வரும்போதே, 'மார்பில் ஏதோ ஒருவித வலி எடுப்பதாகத் தெரிகிறதே!' என்று தனக்குள் எண்ணியவாறு வீட்டினுள் நுழைகிறான். நுழைந்தவன், தன் மனைவியைக் கூப்பிட்டுப் பாய் விரிக்கச் சொல்கிறான்; அவளும், திருமணத்தின்போது, தம் தாய் தந்தையர்கள் கொடுத்த பட்டு மெத்தையை விரித்து அதன்மீது படுக்கச் சொல்லிவிட்டு, 'என்னங்க, ஏன் ஒரு மாதிரியாக இருக்கிங்க?' என்று கேட்கிறாள். உள்ளதைச் சொல்கிறான். அவள் வேண்டியதைச் செய்கிறாள்.

வேலையிலிருந்து வந்தவுடன், 'கண்ணே! ஓடிவா, என் இசையமுதே!' எனத் தூக்கி வாரி, அன்பு முத்தம் சரமாரிப் பொழியும் நம் தந்தை, ஏன், இன்று நம்மைத் தூக்கவில்லை என்ற கேள்விக் குறியோடு பேச முடியாமல் படுக்கைக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறான், அவனுடைய அன்பு மகன்.

அவ்வளவுதான்! 'குணவதி......' என்ற குரலோடு, அவனது உடலைவிட்டு உயிர் பிரிகின்றது. 'அய்யோ... அம்மா!' என்ற ஓலமிடும் கூக்குரல் அக்கம் பக்கத்தாரை ஒன்று சேர்த்து விடுகிறது. இது வாழ்க்கை? இந்த வாழ்க்கை நடத்துவதற்கு எண்ணற்ற பொய்கள்! எங்கும் போரும் பிணக்கும்!

> நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்திவ் வுலகு. —குறள்

இந்த வாழ்க்கையின் காலம் ?

இந்த வாழ்க்கையில் ஈடுபட்ட மனிதனின் வளர்ச்சி......?

இவை அனைத்தையும் எண்ணிப் பார்க்கத் தலைப்படும் போதுதான் இறப்பு நம்மை அணுக எவ்வளவு சீக்கிரமாக ஓடோடி வருகிறது—என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். வயது ஆக ஆக, இறப்பு என்னும் மனிதன் நெருங்கி வருகிறான், நண்பனாக இருக்க. இறுதியில் அவனே வெற்றி பெறுகிறான். அவ்விதம் வெற்றி பெறுவதற்குள் நாம் எவ்வளவு துரிதமாக நம்மை நாமே பாழாக்கிக் கொண்டு, 'பிரேத மனிதனே! வாவா' வென அழைப்பு விடுகிறோம்.

அந்தக் குறுகிய காலத்திற்குள் தாயின் வயிற்றிலிருந்து சேயாகப் பிறந்து, தவழ்ந்து, எழுந்து நடந்து, காண்போர் வியக்கும் அளவில் பல அதிசயமான நிகழ்ச்சிகளைச் செய்து காட்டிக் கட்டிளங்காளைப் பருவ மெய்திக் கண்டபடி யெல்லாம் — மனம்போன போக்கெல்லாம் சென்று சீரழிந்து, ஒரு பெண்ணுக்கு உடந்தையாகி, உரியதொரு குழந்தைக்குத் தந்தையாகி இறக்கின்ற அப்பெரு வாழ்க்கை, நாம் கண்ணை மூடி கண்ணைத் திறப்பதற்குள் முடிந்துவிடுகின்றது. என்னே வியப்பு! பெருவாழ்வு என்று கருதிக் கொண்டிருக்கும் நாம், குறுகிய அளவில் வாழ்க்கையை நடத்திவிட்டு இந்த உலகத்தை விட்டே சென்றுவிடுகிறோம்.

பிறப்பது ஒரு முறை!

குழந்தையாக வளர்ந்து வளர்வது ஒரு முறை......

காளைப் பருவ மெய்திக் காதலித்துப் பிறருடைய பழிச் சொற்களைச் சுமந்து திரிவது ஒரு முறை......

திருமணம் புரிந்துகொண்டு, இன்ப வாழ்வு என்று கருதிக் கொண்டிருக்கும் நேரத்தில் தாயும் தந்தையும் இழந்து கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிப்பது ஒரு முறை......

பிறந்த மகனோடு ஆடிப்பாடி தன் வாழ்க்கையை முடித்துக் கொள்வதும் ஒரு முறை......

இந்தப் பொல்லாத உலகத்தில் மனிதனாகப் பிறந்து ஒரு முறைதான் வாழ்கிறோம். இன்ப துன்பத்தை ஒரு சேர அனுபவிக்கிறோம். அவ்விதம் அனுபவிக்கிற நேரத்தில் வருகின்ற துன்பம் எத்தகையது?

இந்தக் கேள்விக்குத்தான் மனிதனின் ஒழுக்கம் முன்னே வந்து நிற்கிறது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் —குறள்

சிறிது காலத்தில் பிரிந்து போகவிருக்கும் உயிரைக் காட்டிலும் பெரிதாம் ஒழுக்கம். அந்த ஒருக்கத்தைத் தான் பெரிதும் போற்றிக் காக்க முற்பட வேண்டும் என்றார், வள்ளுவப் பெருந்தகை. அந்த ஒழுக்கத்திற்குப் புறம்பாக நடந்து, தன்னுடைய பெருநாள் வாழ்க்கையை ஒரு சிறு நாளைக்குள் முடித்துக் கொண்டு செல்கின்ற மனித சமுதாயம் இது.

அந்தக் குறுகிய எல்லைக்குள் எத்தனை பேர் அவனுக்கு வெவ்வேறு வகையில் உரியவராகின்றனர்? இன்றைய சமுதாயம், ஒன்றையொன்று கட்டிக் காக்க முன்வந்து விட்டால் குறைந்த வாழ்நாளிலேயே நன்முறையில் வாழ முடியும். உள்ள வாழ்நாளும் விரைவாக அழியவும் அழியாது.

ஒரு மனிதன் தன் உடலைக் காக்கும் பருவம் இளமைப் பருவம். அவ் விளமையைத்தான் இன்று பலர் பலவிதமாக வீணாக்கிச் செலவழித்து, வாழ்நாளைக் குறைத்துக்கொண்டு, இறுதி முடிவைத் தேடிக் கொள் கின்றனர். கட்டுக் கோப்பாக விளங்கிய காளையொருவன் ஓரிரண்டு ஆண்டுகட்குப் பின் பார்த்தால் பழுதான நரம்பும், சுருக்கம் விழுந்த தோலும், ஒட்டிய கன்னங் களும், குழிவிழுந்த மங்கிய கண்களும் தன்னுடைய நிரந்தர உரிமையாக்கிக் கொள்கிறான். ஏன் இந்நிலை?

காலையில் செந்தாமரை மலர்கிறது. அவ்விதம் மலர் கின்ற செந்தாமரை அந்திப் பொழுதில் மறைகிறது. மனித வாழ்க்கையும் அப்படித்தான் மறைந்துவிட வேண்டுமா? 'நேற்றுக் கண்டேனே, இதற்குள்ளாகவா இந்த உலகத்தை விட்டுப் பிரிந்திட வேண்டும்? நல்ல சாவப்பா, மருதப்பன் சாவு!' என்று அக்கம் பக்கத்தார் கூறும் அளவில் பயணமாகி விடுவதுதான் வாழ்க்கையா? ஓரறிவு படைத்தவைக்கும் ஆறறிவு படைத்த மனிதனுக் கும் என்னதான் வேற்றுமை இருக்கிறது?

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்ததற் றிளமை. நாலடியார்-17

இளமையைப் பற்றி என்னவென்று கருதுகிறீர்கள்? அஃதொரு குளிர்ச்சி பொருந்திய சோலைகளிலுள்ள பயன் பெறும் மரங்களைப் போன்றது. அதோடு, பலவித மான கனிகளைத் தந்து சாக்காட்டை நோக்குந் தன்மை யுடையது. அதைப் போன்றதுதான் இளமையிலே நாம் காணும் நல்விருந்து. இளமையழகு பொருந்தியிருக்கும் வரையில் பார்ப்போருக்கு இனிமை பயக்கிறது. ஆனால், அந்த இளமை எதுவரையில் நீடித்திருக்கிறது?

ஒரு சில ஆண்டுகள்!

மார்கழித் திங்களிலே தோன்றும பனியைப்போல... அதன் பின்...!

சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு. — நாலடியார்—13

சொற்கள் தடுமாற, கோல் ஊன்றி நடக்கும் நிலைமை வந்தடைய, முறுக்கேறிய நரம்புகள் வலிமை குன்றி, அதனால் தளர்ந்த நடையைப் பெற, வெள்ளைப் பற்கள் மறைந்து வெட்ட வெளியாக மாறிப் பலரால் பழிக்கப் பட்டு, இல்வாழ்க்கையை விட்டுக் 'காமமே கண்ணாயினார்' என்ற முதுமொழிக்கொரு சான்றாக விளங்கி, உண் மைக்கு மாறாகத் தீமைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டு வாழும் மனிதரைத்தான் காண இயலும். காரணம், இளமையில் தன்னைக் கட்டிக்காத்துக்கொள்ளாமல் கண்ட வாறு உடலைக் கெடுத்துக் கொண்டு வாழ்வதினால்தான்.

'இழுக்கல் இயல்பிற் றிளமை...' —திரிகடுகம்-13

இளமைப் பருவமானது வழுவுதலை இயல்பாகக் கொண் டது. அதை அறிந்து நடப்போரே நீண்டநாள் வாழ்வு நடாத்த முடியும் என்பதே மேலே உள்ள வாசகம் நமக்கு நினைவு படுத்துகின்றது. விளம்பி நாகனாரும்,

மூத்தல் இறுவாய்த் திளைநலந் தூக்கில்
—நான்மணிக்கடிகை-17.

என்றும், பூதஞ்சேந்தனார்,

இளமையை மூப்பென் றுணர்தல் இனிதே
—இனியவை நாற்பது-37.

என்றும் இளமை நிலையாமையைப் பற்றி நன்கு விளக்குகிறார்கள். முதுமை வந்துற்றதும் இளமை அழிந்துவிடுகின்றது. அவ்வளவு குறுகிய காலத்துக்குள் அவ்விளமையானது மாய்ந்தொழிந்து விடுகின்றது என்கிறார்கள்.

தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டுங் காழிலா
மயமர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று. —நாலடியார்-15.

ஒரு புலவர் தம் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கிறார். அவர் அமர்ந்திருக்கும் அத்திண்ணையின் வழியாக முதுமை அடைந்த ஒரு கிழவி கூனடைந்தும், உடல் தளர்ந்தும், தலை நடுங்கியும், தடியை ஊன்றுகோலாக வைத்துத் தடுமாறியவாறு கீழே விழுந்து செல்லும் அந்த மரண வேதனை போன்ற கொடுமையைக் காண்கிறார். அதே நேரத்தில், அவ்விடத்திற்கு மாணுக்கன் வருகிறான். வந்தவன் புலவரை வணங்கி நிற்கிறான்.

"தம்பி! ஒரு நாள், 'இளமை எத்தகையது?' என்று வினவெழுப்பியபோது, 'காலம் வரும்பொழுது சொல்கிறேன்' என்று சொன்னேனல்லவா?"

"ஆமாமய்யா!"

"இப்போது சொல்ல வேண்டியதே இல்லை...அதோ போகிறாளே, ஒரு கிழவி."

"ஆமாம்! இந்தத் தெருக்கோடி முனையில் சிறு குடிசையில் வாழ்பவள்..."

"அந்தக் கிழவி இளமையில் எப்படி இருந்தாள் தெரியுமா?"

பேசாமல் இருக்கிறான் மாணவன்.

"கட்டழகு வாய்ந்தவளாக இருந்தாள். அவளைக் கண்டு பிறருடைய மனத்தில் ஒருவித வேட்கை தோன்றும் அளவிற்குத் தன்னை அழகுபடுத்தி நடந்தாள்; இன்றோ, அழகு அழிந்தது; இளமை மறைந்தது; முதுமை வந்துற்றது. இதுதான் இளமையின் வாழ்வு" என்று கூறி முடிக்கிறார். மாணுக்களின் மனம், தான் உள்ள

காலத்திலேயே உடலைக் கட்டுக் கோப்பாக வைத்துக் கொண்டு முடிந்த வரையில் தாயகத்திற்குக் கடமையைச் செய்ய வேண்டும் என்று எண்ணம் கொள்ளுகிறது. மேலே குறிப்பிட்ட உரையாடலின் கருத்தைக் கொண்டதுதான், நாலடியின் கருத்து.

இவ்வுலகத்தில் நிலையாததை நிலையானது என்று கருதி இளமையைக் கழிக்கின்றனர். அதன் பிறகு முதுமை வந்துற்றபோது, 'என்ன பிழை செய்தோம்? இளமையில் வீணுகக் காலத்தைக் கழித்தோமே' என்றெல்லாம் எண்ணி எண்ணி நோய் வாய்ப்படுகின்ற மனிதரைக் காணுமல் இருக்க முடியவில்லை. அதற்குத் தான் வள்ளுவரும்,

*நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை* —குறள்

என்று கூறினுர் போலும். அத்தகைய நிலையாமையாகவுள்ள இளமையில் உடலைக் கட்டுக்கோப்பாக வளர்த்து, மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க., 'கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், எஃகு நரம்பும், ஏக்கழுத்தும் பீடுநடையும் உடையவர்களாகத் திகழ வேண்டும்' என்று கூறியதுபோல் ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒழுங்கான முறைகள் எவை எவையோ அவைகளையெல்லாம் முறையே கைப்பற்றி ஒழுகல் வேண்டும். 'சுவரை வைத்தே சித்திரம் எழுதல் வேண்டும்' என்ற பழமொழிக்கு உடல் என்னும் சுவரை வளமையுள்ளதாக, சீக்கிரம் வலிமை இழந்து போகாததாகச் செய்து கொள்ள வேண்டும். இளமை விருந்துக்கோர் நன்மருந்து உள்ளதென்றுல் அது ஒழுங்கு முறையேயாகும். அவ்வித ஒழுங்கு முறையின்றிக் கண்டவாறு இளமையின் காலம் செல்லுமேயாயின் உடல் நலம்பெறுது. தீய எண்ணங்கள் நரம்புக் கட்டைக் குலைத்து நரம்புக் குழாய்களில் நஞ்சூட்டி, உறுப்புகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது. அதனுலேயே இளமை அழியவல்லது என்றே கூறலாம். வாழ்வாங்கு வாழ, வழிவகைகளை வகுத்து வாழத் தன்னுடைய உள்ளத்தில் உறுதி கொள்ளுதல் வேண்டும்,

சோம்பித் திரிகின்ற மனிதன், எந்த வேலையையும் நாளை நாளை என்று கூறித் தன் வாழ்நாளையே கழிப்பதைப் போன்றதுதான் இக்கால இளைஞர்கள் தம்முடைய இளமையைப் பாதுகாக்க முன் வராமல் வருங்காலத்தில் காத்துக் கொள்ளலாம் என்று காலத்தைக் கழிப்பதும். இப்படி நாளை நாளை என்று வாழ்நாளைக் கழித்துவிட்டு முதுமையிலே இறந்த காலத்தை எண்ணி எண்ணிச் சாகிருனே, அவனைவிட இந்த உலகத்தில் வேருெரு பைத்தியக்காரனில்லை.

இளமையில் பாருங்கள்! மனிதரையல்ல; பூனைக் குட்டி, யானைக்குட்டி, எலிக்குஞ்சு போன்றவைகளை. அவைகளிடத்தில் நமக்கு ஏற்படும் மகிழ்ச்சியைச் சற்று எண்ணிப் பாருங்கள். ஆனுல், அதே பூனை, யானை, எலி போன்றவைகள், முதுமையடைந்து விட்டால் அந்தப் பரிவு ஏற்படுகிறதா? வெறுத்தொதுக்குவதைக் காட்டிலும் நம்மிடம் என்ன காண முடிகிறது? மனிதரிலும் அப்படித்தான்! இளமையை விரும்புவதுபோல் முதுமையை அவ்வளவாக யாரும் விரும்புவதில்லை. இதை உணர்ந்து, தெளிவு பெற்று இளமையைக் காக்க முன்வர வேண்டும்.

இறப்பும் அப்படித்தான். நாம் இளமைக் கோணத்திலிருந்து பார்க்கும்போது வெகு தொலைவிலிருப்பதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அது உண்மையல்ல; அப்படி எண்ணிக்கொண்டு ஏமாற்றம் அடைவதுதான் உண்மை.

• நம்மைப் பெற்றெடுத்த தாய் தந்தையரை, நம்முடைய நிலையிலிருந்து அவர்களைப் பார்க்கும்போது வயதடைந்து விட்டவர்கள் என்று கருதுகிறோம். உண்மைதான்.

சிறுவயதிலேயே பெறுகின்ற அந்த அனுபவம் திருந்துவதற்கு ஏதுவாக இல்லாதது பெருங்குறைதான். ஆகவே, இளமையை நாம் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தோன்றும் நிலவைப் போன்றது என்பதை நன்குணர வேண்டும். உணர்ந்த உணர்ச்சியிலிருந்து இளமையைக் காத்துக்கொள்ள ஆவன செய்யவேண்டும்,

மனிதனிடத்தில் பெருஞ் செல்வம் எப்படி வந்து சேருகிறதென்று எண்ணுகிறீர்கள்? கூத்தாடுகின்ற இடத்தில் ஒவ்வொருவராகக் கூடிப் பெருங் கூட்டமாகக் கூடுவதைப் போன்றது. அதே செல்வம், எப்படி நம்மை விட்டு ஒழிகிறது தெரியுமா? கூத்து முடிந்ததும் வந்த பெருங்கூட்டம், சிறு கூட்டமாகி, அதுவும் சில நிமிடங்களுக்கெல்லாம் கலைந்துவிடுவதைப் போன்றது. இளமை என்னும் செல்வமும் அங்ஙனமே.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. —குறள்

புறநானூறும், இவ்வுலகத்தின் நிலையாமையைப் பற்றிக் குறிப்பிடும்போது, உலகம் ஒரு நாடகமேடை போன்றது என்றும், அந் நாடகத்தில் வந்து போகும் பலவித நடிகர்கள் தோன்றித் தோன்றி மறைவதையும் ஒத்தது என்றும் கூறுகிறார்.

விழவர் கேடியர் நீர்மைபோல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய —புறநானூறு-29.

இக்கருத்தையும் இளமையையும் நிறைகோலில் வைத்துப் பார்க்கும்போது பொருந்தி நிற்பதை ஈண்டுக் காணலாம். எனவே, இளமையை நன்முறையில் கட்டிக் காத்தால் தான் தாயகத்திற்குத் தொண்டு செய்ய முடியும்.

ஒரு சாரார், 'இதென்ன மாய உடல்தானே; எக் கேடு கெட்டுப் போனால்தான் என்ன?' என்பார்கள். அப் போலிக்கூற்றை நம்பி இளமையைக் காக்காமல் இருப்பது நம்மை நாமே அழித்துக்கொள்வதை யொக்கும்.

இளமையிற் செய்ய வேண்டுவது உடலோம்புதலே யாகும். அவ்வுடம்பைக் காத்தால்தான் நீண்ட நாள் நல்வாழ்வு வாழமுடியும். நாட்டுக்கு நல்ல தொண்டும் செய்யமுடியும். அஃது, ஒவ்வொரு இளைஞரின் தலையாய கடனாகக் கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய இளைஞர்கள், இயற்கைக்கு மாறாக இரவைப் பகலாக்கிக்கொண்டு ஓயாது சுற்றி அலைவதும், ஏடுகளைக் கட்டியழுவதும் பெரிதாகிவிட்டது. இதனால் ஏற்படும்—ஏற்படுகின்ற இன்னல்கள் எண்ணிலடங்கா. ஆகவே, எதற்கும் ஒழுங்கு முறை வேண்டும். ஒழுங்கிருந்

தால்தான் நாட்டிற்கு நன்னிலை எய்தும்—அதற்குப் படுக்கை விட்டெழுதல், உலவல், உண்ணல், படித்தல், ஆடல், உறங்கல் முதலிய குறித்த காலத்தில் ஒழுங்கு முறையில் நடைபெற வேண்டும்.

தமிழ்ப் பெரியார். திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள், 'இளமை விருந்து' என்னும் விழுமிய நூலில் உடம்போம்பும் வகையைக் குறிப்பிட்டுள்ளதை ஈண்டுக் குறிப்பிடுதல் நலமெனக் கருதுகிறேன்:—

''காலையிலும் மாலையிலும் உலவுதல் நல்லது. உலாவலில் கதிரொளியில் மூழ்கலும், காற்றில் தோய்தலும் நிகழ்கின்றன. உலவ இயலாதார், ஏதாயினும் வேறுவிதப் பயிற்சி செய்யலாம். அன்னார் குதிரை யேற்றம், நீச்சு, சிலம்பம், ஆசனம் முதலியவற்றில் ஏதாவதொன்றைக் கொள்ளலாம். பயிற்சியின் பின்னை நீராடுதல் சிறப்பு.

தீட்டிய அரிசியைத் தள்ளுக; கொழியல் குத்தரிசியைக் கொள்க. கீரை, காய், கனிகளை உண்க. காப்பி, டீ, கொக்கோ முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர், இளநீர் முதலிய வற்றை அருந்துக. வாதுமை, நிலக்கடலை, தேங்காய் இவை கொழுமையுண்டு. எதையும் அளவறிந்துண்பது சால்பு. மண் பாண்டச் சமையல் நல்லது. பசியெழுந்த பின்னை உண்ணும் பயிற்சி உடலோம்புவதாகும். வேளைக்கு வேளை பசியெழும்பு வது உடலோம்பு முறையைப் பொறுத்திருக்கிறது. சுருட்டு, பீடி, சிகரெட் முதலியவற்றைக் கனவிலுங் கருதாதேயுங்கள். தரைச் செலவு, கடற் செலவு முதலியனவும் உடம்போம்பலுக்குத் துணை செய்வன.

உடற் பயிற்சியை ஒழுங்காகச் செய்தும், பொருந்திய உணவைத் திருந்த உண்ண வேண்டும். நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச் செய்யப் பயிலல் வேண்டும். இல்லையேல், உடல் நலனுறாது. தீய எண்ணங்கள் நரம்புக் கட்டைக் குலைத்து நரம்புக் குழாய்களில் நஞ்சூட்டி, உறுப்புக்களை அரிக்கும்.''

இதன்படி நடக்க, இக்கால இளமை உள்ளம் நடக்க முன்வருமானால் முதுமையும் இளமைபோல் தோன்றும். நீண்ட வாழ்வு பெறலாம்; தொண்டு புரியவும் முடியும். பாரதியார் கூறுவதற்கொப்ப,

தோளை வலிவுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணி பலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும்—கட்டு

''மாறு வுட்லுறுதி...'' என்பதற்கு ஏற்ப நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள முன்வர வேண்டும். இளமையை எந்த அளவிற்குப் பாதுகாக்கிறோமோ அந்த அளவிற்கு நீண்ட காலம் வாழமுடியும்; வேண்டியதைச் செய்ய இயலும்.

**ஒழுக்கம்**

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. —குறள்

நூல்களெல்லாம் பெருமையாகச் சொல்வதென்னை?

எங்ஙனம் அஃது சிறப்பிடம் பெறுகிறது?

இவ்விரு வரிகளுக்கு விடையாக வருவது, அறநெறியிலிருந்து பிறழாது, 'செய்வதைத் திருந்தச் செய்' என்னும் மூதுரைக்கேற்றபடி செய்து முடித்த மூதறிஞர்களைத்தான் எந்த நூலும் பெருமையாக எடுத்தோதுகின்றது. அவர்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதற்குக் காரணமாக விளங்குவதாலும், செயற்கரிய செய்யும் பெரியவராய் இருப்பதாலும், இவ் விருவகைச் சிறப்பும் ஒருங்கே அமைந்திருப்பதாலும் பனுவல்களெல்லாம் புகழ்ந்தேத்துகின்றன. பெருமைக்குரியோரே! நீர் வாழி! நெடுங்காலம் வாழி!'' என வாழ்த்துகிறது; அவர்களை உயர்த்துகிறது; உயிரைவிடப் பெரிதாகக் கருதுகின்றது. இங்ஙனம் வானினும் உயர்ந்து நிற்கின்ற ஒழுக்கத்திலிருந்து பல .பிரிவுகளைப் பிரித்து, விரித்துக் கூறுவதற்கு முன்னே ஒழுக்கம் என்னும் சொல்லின் பொருளை நோக்குவோம்.

**ஒழுக்கமும் அதன் பிரிவும்**

'ஒழுகு'—என்னும் சொல்லிலிருந்து ஒழுங்கு என்பது வந்து நாளடைவில் ஒழுக்கமாக விரிந்து வந்தது. இவ் ஒழுகு என்னும் சொல்லுக்கு நடத்தல் என்று பொருளாகும். அஃதே முறையாக—நற்குணங்களை மேற்கொண்டு நடப்பதற்கு எழுந்த கலங்கரை விளக்

DURAI UNIVERSITY LIBR
86098

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை நல்வழிப் படுத்தித் திருந்தியதோடு தோற்ற மளிப்பதுதான் 'ஒழுக்கம்' என்னும் சொல். மனிதனை எடை போட்டு உயர்த்தியும் ஒதுக்கியும் வைப்பது, அந்த ஒழுக்கம் என்னும் நிறைகோல்தான். 'வாருங்கள், உட்காருங்கள்' என்று ஒழுக்கத்தின் விளைவாக ஏற்படுகின்ற பண்புச் சொற்களும், 'வா, போ, நீ' என்று தரம் குறைந்த அளவில் பேசும் சொற்களும் ஒழுக்கமுடையோனென்றும் ஒழுக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்பவனென்றும் விளக்கமாக சுருங்கக் கூறி விளங்க வைப்பனவாக மிளிர்கின்றன.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் —குறள்

இன்று அனுபவத்தால் கண்டறிந்த முடிவு.

| | | |
|---|---|---|
| அழுக்காறு | — | பொறாமை |
| அவா | — | பேராசை |
| வெகுளி | — | சினம் |
| இன்னாச்சொல் | — | கடுஞ்சொல் |

இவை நான்கும் அற்றதே அறமெனப் படுமென முடிந்த முடிவோடு குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

ஒரு மனிதனை ஆராயப் புகுமுன் பொறாமையும், பிறர் பொருள்மீது பெரு வேட்கையும், வீணான சினமும், அச்சினத்தோடு பிறந்த கடுஞ்சொல்லும் இல்லாதவனாக இருக்கிறானா? என்று காணவேண்டும்.

இதுதான் முதல் ஆராய்ச்சி. இல்லையேல் சாதாரண கண்ணாடியை வைத்துக்கொண்டு, 'சந்திர மண்டலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறேன்' என்று சொல்லுகின்ற அறிவற்றவனின் செயல்போல்தான் ஆகிவிடும்.

'அதோ போகிறானே, அந்தப் பிள்ளை...மிகவும் ஒழுக்கமான பிள்ளையப்பா!' என்று பேசிக் கொள்ளும் ஊரார்தான் ஒழுக்கமற்ற பிள்ளையைப் பார்க்கும் போதும், 'இதையும் பெற்றாளே பிள்ளையென்று!' என்றும் பேசுவர். முதலிலே எண்ணம், சொல், செயல் கண்டோமல்லவா, அம் மூன்றும் உள்ளவனைத்தான்

உலகமும், பனுவல்களும் பெருமைப் படுத்திப் பேசு கின்றன.

எண்ணுகின்ற எண்ணமும், அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாக அகத்திலிருந்து மலர்ந்து புறத்தோற்றம் செய்கின்ற சொற்களும், அச்சொற்களை நிலைநாட்டும் வன்மையும் கொண்டவனைத்தான் பனுவல்கள் போற்று கின்றன.

ஒழுக்கத்தின் வாயிலாக வந்த பிரிவுகள்—?

'ஒழுக்கம்' என்னும் சொல் பல கோணங்களிலிருந்து புதுப்புது ஒளி காட்டுகின்றது. இஃது தெரு விளக்காக இல்லை; கலங்கரை விளக்கமாகவும் இல்லை; வான வீதியிலே உலவிவரும் திங்களாகக் காட்சி செய்கிறது. சாதாரண விளக்குக் குறிப்பிட்ட இடத்திற்குத்தான் ஒளி காட்டும்; கலங்கரை விளக்கோ, ஒரு சிறு தொலைவுக்குத்தான் பயன்படும். ஆனால் வானத்து வெண்ணிலவின் ஒளியோ எங்கும் எப்படி எப்படிப் பார்த்தாலும் தெரியும். அப்படித்தான் ஒழுக்கம் என் னும் சொல் நமக்களிக்கும் ஒளியும். அந்த ஒளிக்குள் ஒளியாக விளங்குவதைப் பிரித்து வகுத்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

அறத்துப்பால்! இதுதான் முதலாவதாக குறளில் அமைந்துள்ள பகுதி. அப் பகுதியில் இருவகையாக இல் லறமென்றும் துறவறமென்றும் பிரித்துள்ளனர். அவ் வில்லறத்தையும் துறவறத்தையும் பிரித்துப் பார்க்கும் போது பல அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் காணலாம்.

கடவுள் வாழ்த்து என்று தொடங்கி ஊழ் என்ற அதிகாரத்தோடு அறத்துப்பால் முடிவு பெறுகிறது. அம் முதலுக்கும் கடைக்கும் இடையேயுள்ள அதிகாரங்களை ஊன்றி நோக்கும்போதுதான் ஒழுக்கத்தைப் பிரித்து வெவ்வேறு முறையாக வகுத்து இருப்பதை உணரக்கூடும்.

குழந்தை பிறக்கிறது—

பிறந்த குழந்தை ஒருசில நாளைக்குள் தவழத் தொடங்குகிறது.

தவழ்ந்தது, தளிர்நடையிட்டு ஓட ஆரம்பிக்கிறது.

இவ்விதம் பிறந்து, தவழ்ந்து, வளரும் குழந்தைதான் கல்வி கேள்வி பெற்று, அதோடு கடந்த காலங்களிலே பெற்ற அனுபவத்தைக்கொண்டு, அவ்விதம் அடைந்த அனுபவத்தால் உணர்ந்து, அறிவு பெற்று மனம் பண்பட்டு விடுகின்றது. அவ்வாறு பண்பட்டு நிற்கும்போதுதான் குணம் குன்றேறி நிற்கத் தொடங்குகிறது. அங்ஙனம் குன்றேறி நிற்கும்போதுதான், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல் இந்நான்கும் பறந்து போய்விடுகின்றன. அங்குத்தான் அறநூல்களைக் கற்றதன் பயனாக,

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை —குறள்

நின்று நிலவுகிறது. அறங்கள் பலவற்றையும் பலவாறுகப் பகுத்துணர்ந்து பார்த்து, அவற்றுள் எக்காலத்திலும் துணைக்கு வருவது எது? என்ற வினவில் நின்றாலும் ஒழுக்கமே பக்கத்துணை. உருவத்தின் சாயல் நிழல்போல. அவ்வொழுக்கத்தைத்தான் போற்றிப் பாதுகாக்கப்படும் முறையை அறிய முடியும். அதுமட்டுமல்ல, குடிமையும் அங்கேதான் காட்டிவிடும்.

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்பது அங்குத்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றது.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

| | |
|---|---|
| அழுக்காறு—பொறாமை<br>ஆக்கம்—செல்வம் | இங்கே செல்வம் நிலைப்பதில்லை, காரணம் பிறரைக் கண்டு எண்ணி எண்ணி ஏங்குவதனுல். |
| ஒழுக்கம்—நற்குணம்<br>உயர்வு—அதன் பயனுல் வரும் பெருமை | அத்தகைய பொறாமைப் பேயினிடம் உயர்வின் ஒழுக்கம் நில்லாமல் போகும். |

ஆகவே பொறாமையால் பெருமை தரக்கூடிய ஒழுக்கத்தை விட்டு விலகுகிருன். பின்?

உயர்ந்த குணம் சிதைந்து விடுகின்றது.

உள்ள மதிப்பும் போய் விடுகின்றது.

'...............இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' ஆகி விடுகின்றனர். ஆனுல் மனங்குலையாத நற்குணம் நற் செய்கைகளிலிருந்து தவறினுல் பழிச்சொல் வந்தடையு மென நன்கறிந்துகொள்ளும் வல்லவர்,

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து

என்ற வெண்பாவின்படி தம்மைக் காத்துக் கொள்கின்ற னர். அதனுல், 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை.' அத் தகைய நல்லொழுக்கத்தாரிடம் யாது இயலும் ?

ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

என்றுற்போல், தீய சொற்களை எண்ணுவதற்கும் சொல் வதற்கும் அஞ்சுவர் ; அவர்களால்தான் உலகத்தோடு ஒட்ட ஒழுக முடிகிறது. காரணம், உலகம்—நன்மை தீமை களால் ஆனது என்பதை அவர்களால்தான் உணர முடி கிறது ; உணர்ந்தவாறு நடக்கவும் இயலுகிறது என்பதை மேலுள்ள குறள் வரிகளால் நன்குணர்ந்தோம்.

அந்த ஒழுக்கமென்னும் ஆலமரத்திலிருந்து கிளை கிளையாகப் பிரிந்து, செழித்து, சிறப்புற்றுத் திகழ்வது தான் மற்ற அதிகாரங்களும். குறிப்பாக,

அறன் வலியுறுத்தல் என்னும் முதல் அதிகாரத்திலுள்ள,

1. சிறப்பீனும் செல்வமும்ஈனும் அறத்தின் ஊங்கு
   ஆக்கம் எவனோ உயிர்க்கு
2. மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்து அறன்
   ஆகுல நீர பிற
3. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
   புறத்த புகழும் இல

என்ற மூன்று குறளையும் நோக்கும்போது, அதன் பொருள்கள் அனைத்தும் ஒழுக்கமென்னும் ஆலமரத்தின் பல கிளைகளுள் ஒன்று என்பது தெள்ளத் தெளிய விளங்கிவிடும். ஒரு மனிதன் ஒழுக்கத்தில் உயர்வு பெற் ருல்தான் அறத்தைவிட உயர்ந்ததில்லை என்று உணர்வ தும், மனத்தின்கண் மாசற்றுத் துலங்குவதும், மற்றவை

யாவும் ஆரவாரத் தன்மை என்பதையும் நன்கு உணர்தல் கூடும். அவ்வொழுக்கமென்னும் ஆலமரத்தின் கீழ்ப் பல கிளைகள் உள்ளதையும், அத்தனையும் திருந்துவதற்கு நிழலளிப்பதாய் இருப்பதையும் நன்கு உணர முடியும். இல்லையேல்—?

அன்பு—இந்தச் சொல், எவ்விடத்திலிருந்து தொடக்கமாகிறது என்பதை ஆராயும்போதுதான் ஒழுக்கம், 'என்னுடைய பிள்ளை !' என்று சொல்லிக்கொண்டு கட்டித் தழுவி முத்தமிட ஓடி வருவதைக் காணலாம். ஒழுக்கத்தில் மனிதன் உயர்ந்தவனாய் இருந்தால் அவன் அகத்தில் அன்பு மலரும். மற்ற எந்த உள்ளத்திலும் அன்பு என்னும் முல்லை மலராது; வாடையற்ற இடுகாட்டு மலர்தான் இடம் பெறும். பிறரிடத்தில் அன்புகாட்ட ஒழுக்கம்தான் சொல்லிக் கொடுக்கிறது.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற உயரிய கருத்தைத் தந்து அவனை உரியவனாக்குகிறது. அடுத்து நிகழும் விருந்தோம்பலில் அன்பால் வரு விருந்து காத்தலை,

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

எனக் கூறுகிறார். அதன் பின்னர், 'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்தில்,

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்,

என்ற குறளின் வாயிலாகக் கூறி முடித்து,

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

என்று செய்நன்றி அறிதல் அதிகாரத்தின் வாயிலாக விளக்குகிறார். பிறகு,

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்

என்ற நடுநிலைமையின் கீழ் ஒரு மனிதன் எதனால் அழிந்து போகிறான் என்பதற்கு விளக்கம் தந்து,

காக்க பொருளா அடக்கத்தை அடக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு

என்று கூறி, அடக்கமென்னும் குணத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு காப்பாற்ற வேண்டியதையும், அவ்வடக்கத்தைவிட உயர்ந்த செல்வம் உயிர்க்கு வேறில்லை என்பதையும் கூறி, ஒழுக்கத்தின் ஆறு பிரிவு களையும் விளக்குகிறார் வள்ளுவர். ஒழுக்க வழி நின்ற பிறகு கடைப்பிடிக்க வேண்டிய இருபத்து நான்கு அற நெறிகளையும் தெள்ளத் தெளியக் குறளின் வாயிலாக விளக்குகிறார். இனி, அந்த ஆறு பிரிவுகளையும், அதன் அடிப்படையின்கீழ் அமைந்துள்ள அதிகாரங்களையும் காண்போம்.

அவாவின் கீழ் :—


| | | | |
|---|---|---|---|
| 1. | பிறனில் விழையாமை | ... ...அதி... | 15 |
| 2. | பொறையுடைமை | ... ,, | 16 |
| 3. | அழுக்காறாமை | ... ,, | 17 |
| 4. | வெஃகாமை | ... ,, | 18 |


தீச்சொல்லின் கீழ்:—


| | | | |
|---|---|---|---|
| 1. | புறங்கூறாமை | ... ...அதி... | 19 |
| 2. | பயனில சொல்லாமை | ... ,, | 20 |
| 3. | தீவினையச்சம் | ... ,, | 21 |
| 4. | ஒப்புரவறிதல் | ... ,, | 22 |


ஒழுக்கத்தால் விளையும் நன்மைகளைப் பற்றி:—


| | | | |
|---|---|---|---|
| 1. | ஈகை | ... ...அதி .. | 23 |
| 2. | புகழ் | ... ,, | 24 |
| 3. | அருளுடைமை | ... ,, | 25 |
| 4. | புலால் மறுத்தல் | ... ,, | 26 |


செய்தவம் என்பதன் கீழ்:—


| | | | |
|---|---|---|---|
| 1. | தவம் | ... ...அதி... | 27 |
| 2. | கூடாவொழுக்கம் | ... ,, | 28 |
| 3. | கள்ளாமை | ... ,, | 29 |
| 4. | வாய்மை | ... ,, | 30 |

சினம் என்பதன் கீழ்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வெகுளாமை | ... | ...அதி... | 31 |
| 2. | இன்னா செய்யாமை | ... | ,, | 32 |
| 3. | கொல்லாமை | ... | ,, | 33 |

மெய்மையின் கீழ்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நிலையாமை | | ...அதி... | 34 |
| 2. | துறவு | ... | ,, | 35 |
| 3. | மெய்யுணர்தல் | ... | ,, | 36 |
| 4. | அவாவுறுத்தல் | ... | ,, | 37 |
| 5. | ஊழ் | ... | ,, | 38 |

என்கின்ற ஆறு வகையானவைகளிலிருந்து கடைப்பிடித்து ஒழுகுதற்கு வேண்டிய ஒவ்வொரு கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குவதுதான் ஒழுக்கம். அவ்வொழுக்கம் தளரா வண்ணமிருக்க உள்ள உரம் தேவை. அதோடு உறுதியும் ஊக்கமும் தேவை. அதன் பிறகுதான் அவ்வொழுக்கம் நிலைபெற்று நிற்பதற்கு ஏதுவாகும். ஒழுக்கம் என்ற சொல், குறிப்பிட்ட அளவோடு நின்று விடுவதல்ல; அது மேன்மேலும் திருந்தி வருவதற்கேற்றதொரு சொல்லாகும். அதற்கொரு அளவில்லை. அத்தகைய ஒழுக்கம் மேன்மேலும் செம்மைப்படுவதற்கு மேலே காட்டிய ஆறுவகையில் அமைந்துள்ள கருத்துரைகள் மிகமிகத் தேவை. ஒழுக்கம் தளரா வண்ணம் உறுதி இருக்கவேண்டும். அதுதான் தீமையைத் தூர ஒதுக்கி வைத்து நல்லதைச் செய்யத் தூண்டும். ஊக்கமும் உரமும் இருந்தால் ஒழுக்கம் செழித்து ஆல மரம்போல் தழைத்து ஓங்கும். அதன் பயனால் தனிப்பட்டவருக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் நன்மை.

## ஒழுக்கமும்—நெஞ்சப் பாங்கும்

ஒழுக்கமும் அதன் பிரிவுகளும் ஒருவாறு கண்டோம். அவ்வொழுக்கத்தின் சார்பாக விளங்கும் ஒரு நிகழ்ச்சியை ஈண்டுக் காண்போம். நலங்கிள்ளி என்னும் புரவலனின் கருத்தொன்று ஒழுக்கத்தின் உயர்வுக்குச் சிறப்பிடமளிக்கிறது.

''மெல்ல வந்து என்னுடைய நல்லடியைப் பணிந்து, தாங்கள் யான் வாழ வழிசெய்ய வேண்டுமெனக் கோரினல் முரசும், அரசும் கொடுக்க யான் காத்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, என் உயிரையும் கொடுக்கத் தயங்கேன். ஆனல் என்னை எவ்வரசனயினும் இகழ்ந்துரைப்பானயின் பலர் மத்தியிலே உறங்கும் புலியின் மீது தவறி விழுந்த குருடனைப்போல் என்னிடம் பிழைத்துச் செல்லுதல் அரிது மூங்கிலைத் தின்னும் ஆற்றல் பெற்ற களிற்றின் பாதத்தில் மிதிபட்ட மூளையைப்போல் அவனைச் செருவில் மிதிக்காவிட்டால் பொய்மை அன்புடைய பரத்தையரின் புணர்ச்சியில் என் மாலை வாடுவதாக.

மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழுதாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்ருதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே, மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீளமூலை போலச் சென்றவன்
வருந்தப் பொரேஎ னயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைக வென்ருரே.

—புறநானூறு.

என்று சூளுரைத்து எழுதியுள்ள பாட்டில், ஊன்றி நோக்குங்கால் ஒழுக்கத்தின் மேன்மை இனிது புலனகும்.

அங்ஙனம் வெற்றி பெறவில்லையேல்—தீதற்ற நெஞ்சமில்லா கள்ளப் பரத்தையரின் மார்பில் என் மாலை தவழுவதாக. இங்கேதான் மன்னனின் மாண்பு விளக்க மாகிறது. ஒழுக்கத்திலிருந்து பிறழ்ந்து நடக்கும் பரத்தையரின் மார்பகத்தில் தவழவிடேன் என்று சூளுரைப்பது, நுணுகிப் பார்ப்போருக்கு விளங்கும். அதோடு வீரமும், பணிந்து வருவோர்க்கு எதை வேண்டுமானலும் தருவேன் என்று கூறும் நெஞ்சப் பாங்கும் உணரும்

போதுதான் நால்வகைக் கருத்து தெள்ளத் தெளிய விளங்கும்.

*1. இரக்கம்
2. ஈகை
3. வீரம்
4. ஒழுக்கம்

இரக்கம், ஈகை, வீரம், ஒழுக்கம் என்ற இந்நான்கும் உயர் பொருளாக — உன்னத இலட்சியங்களாகப் பண்டைய உள்ளம் கருதிற்று என்பது தெள்ளிதில் புலனாகும். தமிழர், எந்நாட்டோராலும் புகழப்படு வதற்கு முதன்மையாக விளங்குவது இத்தகைய உயரிய குணங்களை உயிர்போல் காத்து வந்ததேயாகும்.

மனிதன் யார்?

அவன் கீழ் அடங்கியுள்ள அரிய செல்வங்கள் எவை?

ஒழுகும் முறை என்ன? என்பவற்றையெல்லாம் ஒவ்வொருவரும் உணரவே பண்டைப் பனுவல்களெல் லாம் ஒழுக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன.

உணர்ந்து தெளிதலே ஒழுக்கத்தின் முதற்படியாகும். அந்த ஒழுக்கந்தான் மனிதனுக்கு என்றென்றும் வெளி யுலகில் புகழ்பெற்றுத் தருவது. உயிரில்லையேல் உட லில்லை என்பதும், விதையில்லையேல் மரமில்லை என்பதும், உணர்வில்லையேல் தெளிவில்லை என்பதும் எங்ஙனம் பெறப்படுகின்றனவோ, அத்தகையதே ஒழுக்கமில்லாத வகையில் வாழும் மனிதனும், வானோங்கி வளர்ந்துள்ள எல்லா மரங்களும் மனிதருக்குப் பயன்படத் தக்கதென

---

*ஒன்று—இரக்கம்

இரண்டு—இகழ்ந்துரைப்போனை விடேன்.

இரக்கம் { என்னை வேண்டு நிற்பவனுக்கு முரசு—அரசு உயர்தர ஒப்புதல். இரக்கத்தால் ஏற்படும் உயர்வு.

இகழ்ந்துரைத்தல் { உறங்கும் புலியின்மேல் தெரியாமல் விழுந்தோன் அடையும் நிலை.

யானையின் காலில் மிதிபட்ட மூளை—ஆற்றல்.

எப்படி கூற முடியாதோ அப்படித்தான் ஒழுங்கில்லா மனிதரின் நிலையுமாகும்.

உள்ளம் என்று ஒன்றிருந்துவிட்டால் மட்டும் போதாது; அதில், உயரிய எண்ணங்கள் எழவேண்டும். அஃதில்லையேல் உள்ளத்திற்குச் சிறப்பில்லை. அந்த உள்ளத்தின் வாயிலாகத் தோன்றும் எண்ணத்திற்கும் பெருமையில்லை. ஆகவேதான் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளதாக இருக்க வேண்டுமெனப் பண்டைய உள்ளம் அறிவுறுத்திற்று.

மனம்—எதையும் எண்ணும்; செய்யவும் துணிவு கொள்ளும். அந்தத் துணிவிற்கு அறிவு அடிமையாகி விடக் கூடாது. ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் எழுந்த அறநெறிச் சாரத்தில் நெஞ்சுக்கு உணர்த்தும் முகத்தால் ஒழுக்கத்தின் உயர்வை உணர்த்துகிறார், முனைப்பாடியார்.

*பிறந்த இடநினைப்பின் பேர்த்துள்ள லாகா
மறந்தேயும் மாண்பொழியும் நெஞ்சே—சிறந்த
ஒழுக்கத்தோ டொன்றி உயப்போதி யன்றே
புழுக்கூட்டுப் பொச்சாப் புடைத்து. —அறநெறி–70.

'பெருமையற்ற நெஞ்சே! உன்னை என் செய்வது? இதற்கு முன்பு உன்னால் தோன்றிய—இடம் பெற்றத் தீமைகளைத் திரும்பவும் எண்ணுகிறாய். இனியும் எண்ணாதே. பெரியோர்களின்—அறிவு சான்ற ஆய்வாளர்கள் கடைப்பிடிக்கும் ஒழுக்கத்தில் நீயும் ஒன்றி நடந்து துன்பத்திலிருந்து விடுபட்டு இன்பங் கொள்வாயாக. அதுவே சாலச் சிறந்தது' என்று அறிவுறுத்துகிறார் புலவர். இச் செய்யுளை நோக்குமிடத்து ஒரு கருத்து புலனாகும்.

மனம் ஒன்று நினைக்கும். அது நினைக்கும் அளவிற்கு நாம் விட்டுச் செல்வோமாயின் நாம் ஒழுக்கத்தினின்று பிறழ்ந்தோம் என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் எண்ணும் மனத்தை அடக்கி, மெய்ப்பொருள்

---

* உயப்போதி—துன்பத்திலிருந்து நீங்கி.
உடைத்து—உடைத்தெறிதல்; தொலைத்தல்.
உய்தல்—பிழைத்தல்.
பொச்சாப்பு—மறதி.

கண்டு, அதன் பின்னர் செயலில் ஈடுபடுதலே ஒழுக்கத்தின் உட்பொருள். இதுதான் மேலேயுள்ள பாடல் நமக்குப் பளிங்குபோல் தெரிவிப்பதாகும். அப்போதுதான், பொருமையுள்ளவனிடத்தில் செயலாக்கம் இல்லாதது போல், ஒழுக்கமற்றவனிடத்தில் வாழ்க்கையின் உயர் வில்லை என்று.

'அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு'

என்ற குறள் எடுத்துக் காட்டுவதை உணர்தல் இயலும்.

பக்கத்து வீட்டு கந்தப்பன் படிக்கிருனே என்று எண்ணி எண்ணி எதிர்வீட்டு ஏகாம்பரம் இருப்பானுயின் அவன் தன் வாழ்வில் உணர்ந்து செய்யவேண்டிய வேலையை மறந்து, பொருமைக்கு ஆளாகி உள்ளதையும் இழந்து விடுவான். அதுபோன்றேதான் ஒழுக்கத்தின் நிலையும் என்பதை உவமானத்தோடு ஒழுக்கத்தைப்பற்றி விளக்கியுள்ளார் பொய்யிற் புலவர்.

பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை யின்ன
—இன்ன நாற்பது.

என்ற வரியை உற்று நோக்குவோமாயின் உண்மை எளிதில் விளங்கும்.

பத்து மாதம் சுமந்து திரிந்த தாய், தன் குழந்தையை அந்தத் திங்களின் இறுதித் தருவாயில் ஈன்றெடுக்கிருள். அந்தச் செல்வத்தைக் காண வேட்கையோடு வெளியே உலவியபடி இருந்த ஒருசிலர் குழந்தையின் குரல் கேட்டு உள்ளே செல்கின்றனர். துக்கத்தோடு திரும்பி வருகின்றனர். அக்கம் பக்கத்திலுள்ள மற்றவர்கள் பார்த்துவிட்டு வருபவரைக் கேட்கின்றனர். 'நொண்டியாகப் பிறந்து விட்டதம்மா!' என்று கூறி விட்டுப் போய்விடுகின்றனர். நாளடைவில் வளருகிறது. ஆனுல் சமுதாயத்தில் உயர்வு பெறுவதில்லை. மனிதன் என்ற பெயர் உண்டே தவிர அந்தப் பெயருக்கேற்ற சிறப்பு இருப்பதில்லை. ஏதேனும் ஓர் உறுப்பை இழந்தாலும் அவன் முழு மனிதனுகிவிடுவதில்லை. அது போன்றதேதான் பல செல்வங்கள் ஒருவன் பெற்றிருப்பினும் ஒழுக்கம் என்னும் செல்வம் அவனைவிட்டு விலகி

இருக்குமேயாஞல் அவன் நொண்டிக்குச் சமமாகத்தான் கருதப்படுவான். அவன் முழு மனிதஞகிவிட முடியாது. அப்படி அவன் முழு மனிதனென யாரேனும் வரிந்து கட்டிக்கொண்டு வருவாரேயாஞல் நொண்டி மனிதஞக இருந்தாலும் சிறப்பிழந்திடுவது போலவேதான் இதுவு மாகும். அதைத்தான், பகல்போன்ற நெஞ்சம் பெற்றவ ராக இருப்பினும் பண்பை மட்டும் இழந்திருப்பாராகில் உள்ளச் சிறப்பு இழந்தவராவார்; அதோடு துன்பமு மாகும். ஆகவே, அவ்வரிய ஒழுக்கத்தை, உலக நியதியை அறிந்து யாவரோடும் ஒழுகும் முறையைத்தான்,

'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்'

என்று கலித்தொகையும், பொய்யாப் பெருந்தகை யியற்றிய குறளில்,

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

என்ற வரிகளும் தெளிவுபடுத்துகின்றன.

எட்டிக்காய் என்பதை உணராதவன் அதைப் பார்த்த மாத்திரத்திலேயே பறித்துத் தின்னலாம்; உள்ள பசி யைப் போக்கிக் கொள்ளலாம் என்றுதான் கருதுகிருன். ஆஞல் அதை அறுத்து சுவைக்க முற்படும்போதுதானே அதன் தன்மையைப் புரிந்து கொள்கிருன். அதுபோன் றதேதான் தூரத்துப் பார்வையில் உள்ள மனிதனை எடை போடுவதும்; பின்னர் உணர்வதும்.

ஒரு மனிதனின் முகத்தைக் கண்டு அவனைப் பற்றிய குறிப்பைக் காண முயலுவதைக் காட்டிலும் அகத்தை துருவித் துருவி ஆராய ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும். அகக் கண்ணுடியைக் காண்பதற்குக் கல்வி இருந்துவிட்டால் மட்டும் போதாது; சிந்திக்கும் ஆற்றல் வேண்டும். எப்படிப் பேச்சாளஞக வேண்டும் என்று கருதுகிறவன் நல்ல பயிற்சி பெற வேண்டுமோ, எழுத் தாளஞக வேண்டுமெனக் கருதுகின்றவன் எழுதி எழுதி எழுத்து வளத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமோ அது போன்றதேதான் ஒருவர் நெஞ்சிலேயுள்ள கருத் தைத் தெரிந்து கொள்வதற்கும் போதுமான பயிற்சியும்

முயற்சியும் வேண்டும். அப்போதுதான் அகத்தை அறிய இயலும்.

அத்தகைய அகத்தை ஆராயும் வல்லுனர்களாக நம் முன்னோர்கள் இருந்து வந்திருக்கின்றனர். ஒழுக்கத்தைப் பின்பற்றி, அதன் வாயிலாக ஒவ்வொருவரின் நெஞ்சப் பாங்கையும் முறையாக உணர்ந்து, அவர்களும் வாழ்ந்து, நாமும் வாழ வழி வகுத்துத் தந்தவர்கள். நம்மில் பலர் தவறக் கூடும் என்பதை அன்றே உணர்ந்தார்கள் போலும். இல்லையெனில் எந்நூலினுட் புகினும் ஒழுக்கம், ஒழுக்கமென எழுத வேண்டிய அவசியமில்லை.

மனிதன், அகம் பெற்றவன். அதன் வாயிலாக நன்மை தீமை ஆராயவும், அறியாமையில் புகவும் சூழ் நிலை உறுதுணையளிப்பது. ஆகவேதான், எக்காலத்திலும் அவன் அழிவைப் பெறலாம் என்பதை உணர்ந்த சான்றோர் விளக்கமாக எழுதிச் சென்றார் போலும். அப்படி எழுதிச் சென்றும் இன்றைய நாளில் அஃது பயன்படாத அளவில் சென்று கொண்டிருக்கிறது.

முதலில் பிறரை உணர்ந்து பார்க்கிறான்; பல குற்றங்களைக் காண்கிறான். இதன் காரணம், உண்மையை உணர்ந்து பார்த்துத் தெளிவு பெற வேண்டுமென்ற எண்ணம் நாளடைவில் குறைந்து வந்ததேயாகும்.

'உண்மை என்ற சொல்லின் பொருளென்ன ?' என்ற கேள்விக் குறியிட்டுத் தன் மனத்தைக் கேட்பானாயின் அவன் முதன் முதலாகத் தன்னை உணரத்தான் வழி தேடுவான்; வகை தேடுவான்.

மனிதர்களாகப் பிறந்தவர்களெல்லாம் அறிவாளிகளாகி விடுவதில்லை. அறிவு வளர உள்ளத் திண்மை மிக மிகத் தேவை. அப்படி அகத்திலே உறுதி கொண்டவனைக் கண்டுதான் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய நான்கும் கண்டு அஞ்சுகின்றன. காரணம் ஒழுக்கம் என்னும் தலைவன் அரியாசனத்தில் இருப்பதால். அந்நிலைமை எல்லா அகத்திற்கும் வேண்டும். ஒழுக்கம் தலையாக நின்று அணி செய்ய நம்மை நாமே செப்பனிட்டுக் கொள்ளுதல் வேண்டும். அதைத்தான் அறம்

வலியுறுத்துகிறது. அதைத்தான் பண்டைய உள்ளமும் எழுதிச் சென்றது.

## இரக்கமும்—ஈகையும்

ஒழுக்கத்தின் விளைவால் ஏற்படுவதே இரக்கமும் ஈகையுமாகும். அவன்தான் ஒருயிர் முதற்கொண்டு ஆறறிவு படைத்த மனிதன் வரையில் எண்ணிப் பார்க்கத் தலைப்படுகிறான்.

இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். எவ்வளவோ நிகழ்ச்சிகளை, விளையாட்டென்ற முறையில் எதை எதையோ இந்த உலகம் செய்து கொண்டிருப்பதை. கடலிலேயும், குட்டை குளங்களிலேயும் ஓடியாடித் திரிந்த மீன்களையெல்லாம் பரதவர்கள் பிடித்துக் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். அப்படி விற்பனை செய்கின்றவர்களெல்லாம் அறிந்துதான் செய்கிறார்களா வெனில் பெரும்பாலோர் இல்லை. அதை, உயிரோடு பெற்று வந்து அதற்கென்று ஒரு கண்ணாடிப் பெட்டி யைச் செய்து, நடுவிலே மின்சார விளக்கிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர், இந்த உலகத்தில் படித்துப் பட்டம் பெற்ற ஒரு சில பெரிய மனிதர்கள். அனைத்தும் அறியாமையால் நிகழ்வதே தவிர, வேறொன்று மில்லை. உணர்ந்து பார்க்க இந்தச் சமூகம் தலைப்பட்டிருந் தால் இத்தகைய கொடுமைகள் நடைபெறுவதற்கே இடமில்லை.

ஒரு கண்ணாடியில் சில மீன்கள் குறுகிய அளவிலுள்ள நீரில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. அதனால், அவை கள் எவ்வளவு துடிதுடிக்கின்றன என்பது எண்ணிப் பார்ப்போருக்குத்தான் புலப்படும். ஒரே ஓர் அறையில் எட்டுப் பேர் அடங்கிய குடும்பம் நடக்க வேண்டுமென் றால் எங்ஙனம் முடியாதோ அங்ஙனமே மீன்களுக்கும் பெட்டியில் உலவ இயலாது என்ற தெளிவும் இரக்கமும் தோன்ற வேண்டும். அப்போதுதான் ஈகை அரும்பும். அத்தகைய எண்ணமெழுவதற்கு அடிப்படையானது ஒழுக்கமேயாகும். அவ்வித ஒழுக்கத்தால் ஏற்படுவது தான் இரக்கமும் ஈகையும்.

கி. பி. இரண்டாயிரத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களில் ஒருவனாக விளங்கப் பெற்ற வேள்-பேகன் என்பான் வரையா வள்ளன்மையிற் சிறந்து நின்றான். ஒழுக்கம்—அவன்பால் உயர்ந்து நின்றது. இரக்கம் கொண்டான்; ஈகை அளித்தான். ஆகவேதான் கபிலர் என்னும் பெரும் புலவர், 'குளத்திலும் வயலிலும் களர் நிலத்திலும் ஒப்பப் பெய்யும் மாரி போலப் பேகனும் சிறந்த கொடையாளியாக நின்று விளங்கினான். அவன் அறத்தை—இரக்கத்தைப் பெரிதாகக் கருதினனேயன்றி மறக்கள வேள்வியைப் பெரிதாக நினைத்தானில்லை'' என்றதை,

அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத்த லல்லது
படைமடம் படாஅன்பிறர் படைமயக்குறினே

—புறநானூறு-1\2.

என்றார்.

பேகனைச் சிறப்பித்துக் கூறுவதற்குக் கருதிய புலவர் உள்ளம் மழையையே ஒப்புவமையாகக் காட்ட முயன்றது. எப்படி மேகம் ஒரு பயனும் எதிர்பாரா வகையில், குறித்த காலத்தில் உலகம் நடைபெறுவதற்காக வேண்டி இரக்கங்கொண்டு தன் வேலையைச் செய்கின்றதோ, அத்தகையதே பிறர்க்குப் பேகன் தந்த் கொடையும் என்கிறார்.

''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள'' —குறள்-223.

என்ற குறள் வரிக்கொப்பக் கொடையளித்த வள்ளலாகப் பேகன் காணப்படுகிறான், புறநானூற்றுப் புலவனின் வாயிலாக. அதுமட்டுமல்ல, அவனது இரக்கமும் ஈகையும் காண மற்றொரு செய்யுள் வருகின்றது.

தன் மலைகளைச் சுற்றிப் பார்க்க வருகிறான் வேள்-பேகன். அஃது, கார்காலம். எங்குப் பார்த்தாலும் மழையால் செழித்தோங்கி மரங்களும் செடிகளும் அம்மலைகளை

அழகுபடுத்தி நிற்கின்றன. அந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே வந்த பேகனின் கண்களுக்கு மயிலொன்று தென்படுகின்றது. அதைப் பார்க்கிறான். அந்த மயில், இறகை விரித்தாடியபடி இருக்கிறது. அது கண்டவுடன் அவனுக்குக் குளிரின் நினைவு வருகிறது. 'ஆகா! குளிரால்தான் இப்படி நடுக்கம் கொள்கிறது!' என்றெண்ணித் தான் போர்த்தி வந்த விலைமதிக்க வொண்ணாத பெரும் போர்வையை அதன்மீது போர்த்தி விட்டுத் தன் இருப்பிடத்தைச் சேர்ந்தானென்பது பல புலவர்களின் பாக்களிலிருந்து தெரிய வருகின்றது.

''வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்கன் னாடன் பேகன்'' —சிறுபாணாற்றுப்படை.

''உடாஅ போரா ஆகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக!'' —புறநானூறு.

''மடத்தகை மாமயில் சனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் களிமான் பேக!'' —புறநானூறு.

போன்ற வரிகளால் அவரது கொடைத்திறனும், இரக்கத்தின் முதல் தலைவனென்றும் உணர்வதற்கு ஏதுவாக உள்ளது. அத்தகைய சிறந்த வள்ளல்களும் ஒழுக்க சீலர்களும் அன்று இருந்தனர்.

மனிதன், இறுதித் தருவாயில் எதைக்கொண்டு செல்கிறான்? என்னதான் பயன்பெற்றுத் திகழ்கிறான் என்பதை நோக்கும்போதுதான் அவன் ஒழுக்கத்தின் சிறப்பை உணர்ந்து பார்க்க முயல்கிறான். அப்போது தான் அவனிடத்தில் இரக்கம் தலைகாட்டுகிறது; ஈகை சுரக்கத் தொடங்குகிறது.

எண்ணிப் பார்த்தே எதையும் செய்தது, அந்தக் காலம்; இன்று கண் மூடிக் கொண்டே உணர்ச்சி வயப்பட்டு அறியாமையில் ஈடுபட்டு அறிவை இழந்து மீன் போன்ற பல்லுயிர்களை இரக்கமின்றிப் பலவித இடையூறுகளுக்கு ஆளாக்குகின்றனர்.

அக்காலத்தவர் விலங்கினின்று மனிதனைத் தனியாய்ப் பிரித்து வைத்ததே அவைகளைக் காட்டிலும் ஆறறிவும் பொருந்திய உணர்வும் பெற்றிருந்ததால்! இரக்கமும் ஈகையும் மனிதனிடத்தில் செறிந்து காணப்பட்டதால்! இன்று, அந்த இரக்கமும் ஈகையும் யாண்டும் காணுதற்கு இயலாவகையில் உள்ளன; என்னே, இக்கொடுமை?

அக்காலத்தேவர், தெருவிலே ஒரு முதியவர் கோல் ஊன்றிக் குளிரால் நடுநடுங்கிச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்துத் தம் வீட்டிலேயே இருக்கச் செய்து, அக்குளிர் நிற்கும் வரையில் வேண்டிய உதவிகளைச் செய்து அந்தக் காற்றும் மழையும் நின்றபின்னர் வழியனுப்பி வைத்திருக்கின்றனர். இன்றோ, வயிற்றுக்கு உணவற்று ஒவ்வொரு வீட்டுப் படியிலும் ஏறி, 'அம்மா'வென அழைக்க, அக்குரல் கேட்டு உள்ளிருப்போர், 'போய்யா! வேலையில்லையா?' எனக் கண்டபடி பேசிப் பேசிப் பலர் தமக்குள்ள குணத்தைக் காட்டிக்கொள்கின்றனர்.

'இல்லை!' என்று சொல்லக்கூட அவர்களுக்கு மனம் இருப்பதில்லை.

அக்காலத்தவர் தம்முயிர் போலவே எல்லா உயிர்களையும் கருதினர். ஆகவேதான் தமக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து சென்றனர்; நாளை வேண்டுமே, அதற்கடுத்த நாள் வேண்டுமே என்ற நோக்கோடு எந்த வீட்டிலும் பொருள் இருந்ததில்லை; 'பிறர் வந்தால் இல்லையென்னாது வழங்க வேண்டுமே!' என்ற ஒரே நோக்கோடுதான் ஒவ்வொருவர் வீட்டிலும் பொருள்கள் குவிந்து கிடந்தன. புலவர்களும் அங்ஙனமே பெற்ற பரிசில் அனைத்தையும் பகுத்துண்டு பல்லுயிர் வாழச் செய்தனர்.

இன்று, அந்த இரக்கமும் ஈகையும் எங்கோ மறைந்து கிடக்கின்றன. தான் வாழவில்லையென்றாலும் பிறர் வாழ வேண்டும் என்று விளங்கிய நாடு பிறர் எந் நலிவு பெற்றாலும் நாம் பொலிவோடு வாழ்தல் வேண்டும் என்ற குறுகிய நோக்கோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இரக்கம், உயர்ந்த உள்ளத்தால் உண்டாவதாகும். சான்ருேரின் நட்பால் பல நல்ல பழக்கங்களும் முறைகளும் நமக்கு ஏற்படுவது போலத்தான் ஒழுக்கத்தின் வாயிலாக இரக்கம், ஈகைபோன்ற நற்குணங்களும் விளைகின்றன. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இரக்கமும் ஈகையும் கொண்ட மனநலம் வாய்க்கப் பெற்றிருத்தல் வேண்டும். அவர்களே மனிதர்கள்; அவர்களே எல்லாவற்றும் எக்காலத்தும் தலையாக நின்று போற்றுதற்குரியவர்களாவர்.

ஒரு மனிதன் இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் எண்ணுதல் வேண்டும். அப்போதுதான் ஒழுக்கத்தினின்று மாருமல், இரக்கத்திற்கும் ஈகைக்கும் இடையே உலவ இயலும். வாழ்க்கையில் இன்பமும் அப்போதுதான் மிளிரும்; எல்லோரையும் ஒரு நிறையாகப் பார்க்க முடியும். அன்பும் பண்பும் அங்கேதான் காண முடியும். மனித வாழ்க்கையின் இலக்கணமே அங்கிருந்து தான் வெளிப்படுகின்றது. ஒழுக்கத்தின் ஒளியே அதுதான். இதை, நம் மூதாதையர்கள் நன்கறிந்து எழுதிவைத்துப் போயினர். ஆனுல் நம்மவரில் பலர் அதன்படி நடக்க மறுத்துவிடுகின்றனர். அறிவுக் கண் இழந்து, 'எல்லாம் பழைமை' என ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். அப்படித் தள்ளிவிட்டவர்களாகிலும் ஏதேனும் ஒழுங்குமுறை வகுத்து வாழ்கின்ருர்களென்ருல் அதுவுமில்லை. பழமையினும் பழைமையாக முதுமையினும் முதுமையாக இருக்கின்றனர். என்னே, கொடுமை! ஆழ்ந்த பொருளற்ற பேச்சுக்களும், வெளிப் பகட்டு முறைகளும்தான் இன்று நம்மிடையே உலவி வருகின்றது.

நாமோ, நல்லவைகளைப் புறக்கணித்துத் தீயவற்றை வளர்த்து வருகிருேம்; போற்றி வருகிருேம் எதைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பது அரிதாகிவிட்டது. எவர்— எதைக் கூறினுலும், அதை, அப்படியே நம்பிவிடுபவர்களாக ஆகிவிட்டோம். பாரதியார் கூறியபடி, இன்னும் ''பாமரராய், குருடர்களாய், செவிடர்களாய்'' பூமிதனில் உலவுகிருேம். போரையும் பிணக்கையும் வளர்த்துக்

கொண்டு உழல்கிறோம். ஒற்றுமையைப் போற்ற வேண்டிய நாம், வேற்றுமையை வாழ்த்தி வருகிறோம்; வளர்த்து வருகிறோம், இந்நிலை மாறும் வரையில் தமிழ் நாட்டிற்கு உய்வில்லை.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" —பாரதியார்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" —அப்பர்.

இவ்விரு வரிகளையும் உள்ளத்தில் பதியவைத்துக் கொண்டு வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ளல் வேண்டும். இலக்கியங்களையும் பாரதியார் எழுதிய பனுவல் களையும் படித்து வாழ்வுப் பாதையை அமைத்துக் கொள்ளல் வேண்டும். அப்படி அமைத்து வாழ்ந்தவர்கள் தான் நம் முன்னோர்கள். அதனால்தான், அன்று அறம் வாழ்ந்தது. 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற பொதுக் கருத்து நிலவியது.

# இன்பத்துள் இன்பம்

மலையும் மலையைச் சார்ந்த பாகத்திற்கும் உரியவளான மங்கை, தனக்கென ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். 'அவனில்லையேல் நானில்லை!' என்றாள் அவள்; 'அவளில்லையேல் நானில்லை!' என்றான் அவன். அவ்விருவருக்குமிடையே நற்செயல்களைச் செய்கிறாள் தோழி.

இம் மூன்று பேரும் மும்மணிகளாக விளங்குகின்றனர். காலம் கடந்து கொண்டே போகிறது. இரவும் பகலும் அந்த நல்லிசைக் காதலர்கட்குப் பெரிதும் இன்பமாக இருந்து வருகிறது. ஆனால் அவ்விருவருக்குரிய தோழிக்குமட்டும் கவலை ஏற்படுகிறது!

என்ன கவலை தெரியுமா? 'அல்லும் பகலும் இப்படி இன்பத்தில் திளைத்தபடித் திரிகின்றனர். இச் செய்தி, அவளைப் பெற்றவருக்குத் தெரிந்தால் உறவு கொண்ட தலைவரின் நிலைமை என்னவாகும்? அவள்தான் என்ன ஆவாள்?'—இதைத்தான் சற்று நேரம் நினைத்தாள். ஏதோ ஒன்றை உறுதி செய்து கொண்டாள்.

என்றும்போல் அன்றைய இரவும் வேலிப் புறத்தில் வந்து நின்றான். தலைவிக்குப் பதிலாகத் தோழி நிற்பதைக் கண்ணுற்றான். 'ஏன்...அவள் எங்கே?' என்று கேட்கிறான்.

அதற்கு அவள், "தலைவரே! என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் நன்மையின் பொருட்டே இங்கு வந்தேன். அவரைக் கொடிகள் அணி செய்துகொண்டிருக்கும் பக்கத்தில் அழகுடன் மிளிரும் தினைக்கதிர்களை

புள்ளியொத்த கவரிமான் மேயும் அளவிற்கு மேன்மை பொருந்திய மலைநாட்டுக்குரிய மன்னா! ஒன்றேயொன்று சொல்லுகிறேன்! தவறாகக் கருதாதீர்கள். அணிகலன்களை அணிந்து அழகுடன் மிளிரும் அவளுக்கும் உங்களுக்கும் உறவு ஏற்படுத்தித் தந்தவள் நான். என் உள்ளத்தில் உவகை பெருக்கெடுத்தோடும்படிச் செய்யவேண்டியது, உங்கள் பொறுப்பாகும்! ஒன்றுமில்லை......இனியும் இரவில் வராமல், விரைவில் அவளை மணந்து மகிழ்வோடு இருக்கவேண்டுகிறேன்'' என்கிறாள்.

*அவரை பொருந்திய பைங்குர லேனல்*
*கவரி மடமா கதூஉம் படர்சாரற்*
*கானக நாட! மறவல் வயங்கிழைக்*
*கியானிடை நின்ற புணை.* —குறிஞ்சி—1.

அந்த ஆழ்ந்த கருத்துக்களைக் கேட்ட தலைவன், பேசாமல் வழிபார்த்து விழிவைத்து வேறு வழியற்றுச் செல்ல முயலும்போது தலைவியின் குரல் கேட்டுத் திரும்புகிறான். அவ்விடத்தை விட்டுத் தோழி சென்றுவிடுகிறாள்.

''அன்பரே! தோழி ஏதேனும் தவறாகச் சொல்லியிருந்தால் என்னையும் அவளையும் மன்னிப்பீர்களாக! உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள், எனக்கு'' எனக் குழைவுடன் கூறுகிறாள்.

''அன்பே! உன் தோழியின் ஒவ்வொரு சொல்லும் தேன் சொல்! நாம் இருவரும் இன்பமுடன் இருக்க எப்படியெல்லாம் அவள் நமக்கு நன்மை செய்கிறாள், பார்த்தாயா? அத்தகையவளை நான் குறை சொல்ல முடியுமா என்ன?

''செல்வத் திருமகளே! சிரித்த முகத்தழகி! சிங்கார நடையழகி! உன் தோழி வடித்துத் தந்த இன்பச் சொற்களை ஏற்றுக்கொண்டேன். இன்று முதல் சில நாள் வரையிலும் நாம் பிரிந்திருப்போம்......''

''ஆ! பிரிவா?''

''உன்னை உரிமையோடு திருமணம் செய்துகொள்வதற்காகப் பொருளின் பொருட்டுப் பிரிகிறேன்.......... கண்ணே!''

''எவ்வளவு நாளாகும்?''

''கார்காலம் வருமுன்னே, உன் கார்கூந்தல் காற்றினிலே இசைபாட—அதை நான் கேட்க ஓடோடி வந்துவிடுவேன் !''

''உண்மையாகவா ?''

''உறுதியோடுதான் சொல்லுகிறேன் ! வரட்டுமா, என்னரும் வெண்ணிலவே !''

''குளிர்காலம் வருமுன்னர்......!''

''அனல் காட்ட—புனலோட்டத்தில் புகுந்தாட வந்திடுவேன் !'' என்று சொல்லிப் பிரிகிறான்.

கார்காலம் வருகிறது! அவன்தான் வரவில்லை. குறித்த நேரத்தில் வரத் தவறிய தலைவனைக் குறித்து வேதனைப் படுகிறாள். தன் தோழியைக் கூப்பிட்டு, ''தோழி! தலைவர் குறித்த காலம் வந்துவிட்டது. அவர்தான் வரவில்லை. என் செய்வேன் ? முகிலோடு முகிலாகச் சேரும்போது இடி இடிக்கிறது, அந்த இடி ஏற்படுவதற்கு முன்னதாகச் சோவென மழை பொழிகிறது, அதனால் மண் குளிர்ச்சி பெறுகிறது : மொட்டு மலர்ந்து நிற்கிறது ; கொன்றை மரங்கள் நெருப்பினைப்போல் வெளிச்சங் காட்டி நிற்கத் தொடங்குகின்றன. அழகிய வானம் இடிக்கும்போது எனதுயிர்-என்னிடத்தில் இருக்க மாட்டேன் என்கிறதடீ! துயரம் மேலிடுகிறது !'' என்கிறாள்.

கதழுறை வானஞ் சிதற விதழகத்துத்
தாதிணர்க் கொன்றை யெரிவளர்ப்பப் பாஅய்
இடிப்பது போலு மெழில்வான நோக்கித்
துடிப்பது போலு முயிர். —முல்லை—18.

தோழி என்ன செய்ய முடியும் ? கார்காலமல்லவென்று பொய் கூறவும் மனமில்லை ; தன் தலைவியின் உள்ளத்தை மாற்றியமைக்கும் ஆற்றலும் கிடையாது. ஆகவே அவளது சொல்லுக்குச் செவி சாய்ந்தபடி அனைத்தையும் கேட்டுக் கொள்ளுகிறாள்.

எப்படியோ சென்றவன் மீண்டும் வருகிறான். அவனுடைய பெற்றோரிடம் திருமணத்தைப்பற்றிப் பேச தம் தாய் தந்தையரை அனுப்பி வைக்கிறான். அவர்கள் மறுத்துவிடுகின்றனர். அதன் பொருட்டு இரவிலே தன் தலைவியைக் கண்டு, நடந்தவற்றைச் சொல்லுகிறான்.

அவளென்ன செய்ய முடியும்? பேசாமல் மௌனியாகி விடுகிறாள்.

''அன்பே! இனி நமக்குள்ள ஒரே ஒரு வழி வீட்டையும் புறக்கணித்துச் செல்ல வேண்டியதுதான். நம்முடைய காதல்—காதலாகவே மலர்ந்து பொலிவு பெற்று விளங்க வேண்டுமானால் நீ உன் வீட்டை மறக்க வேண்டியதுதான்......வேறு வழியில்லை!'' என்கிறான்.

''தங்களின் கருத்திற்கு தடையேது?'' என்கிறாள் அவள்.

''ஆருயிரே! நாளை மீண்டும் வருகிறேன். வருவதற்குத் தயாராக இரு! நான், என் இல்லத்திற்கு அழைத்துச் செல்லுகிறேன், அப்போதே திருமணம்.........என்ன சொல்லுகிறாய்?''

''சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?''—என்றபடி தலையசைத்து அவனை வழியனுப்பித்து வைக்கிறாள்.

மறுநாள் மாலை தலைவன் சொல்லிவிட்டுச் சென்ற சொல்லின் கருத்து நினைவுக்கு வருகிறது. வேதனைப் படுகிறாள்! எதற்காகவென்று கருதுகிறீர்கள்? 'வறண்ட வழியாகச் செல்ல வேண்டுமே!' என்ற நினைவால்தான் மிகவும் வருத்தப்படுகிறாள். அதே வேளையில் அவளது உயிர்த் தோழியும் அங்கு வருகிறாள். கூம்பிய மலர்போல் வாடிக் கிடக்கும் தன் தலைவியின் முகத்தைக் கண்டு, ''அம்மா! உங்கள் முகமேன் வாடிக் கிடக்கிறது?'' என்கிறாள்.

''வாட்டமொன்றுமில்லையடீ! என் தாய் தந்தையர்கள் அவருக்கு மணம் செய்துவைக்க மறுத்துவிட்டார்கள். அதன் விளைவாக, இன்றைய நள்ளிரவில் அவரோடு போவதற்கு நேற்றைய இரவே அவரிடம் சொல்லிவிட்டேன். அவரும் வருவார். ஆனால்—?''

''என்ன, ஆனால்—?''

''ஒன்றுமில்லை...செல்லவேண்டிய வழியைப் பற்றி நினைத்தேன்...அச்சமாக இருக்கிறது!''

''ஊம்...அப்புறம்?''

''அப்புறமென்ன! இப்போது என் பயணத்தை நிறுத்த முயலுகிறேன்...காரணம், பாலையின் நிலையை நினைத்தால் நெஞ்சம் நெகிழ்கிறது. அவர் அழைத்துச் செல்லத் துணிந்துள்ள வழியை நினைத்தால் வேதனையாக இருக்கிறது.

அந்த வறண்ட வழியிலே பாழ்மனைகள் ஏராளம்! அந்த மனைகளின்மீது பீர்க்கங்கொடிகள் படர்ந்து உள்ளன. அப்பாழ்மனையில், கூரிய நகமுடைய கரடிகள் உறங்குவதற்கு இடமாகக் கொண்டுள்ளன. அவ்வளவு பயரங்கரமான வழியிலே என்னை அழைத்துச் செல்லத் துணிவு கொண்டிருக்கிறார். ஆனால் அந்தத் துணிவு எனக்கு ஏது?'' என்று சொல்லுகிறாள்.

''அம்மா! கவலை கொள்ள வேண்டாம். துணிவு பெற்றவர் இருக்கும்போது உங்களுக்கு ஏன் வீணான கவலை? எப்படியும் புறப்பட்டுத்தான் ஆகவேண்டும். இல்லையென்றால் உங்கள் காதல் கருகிப் போய்விடும்... அதற்காகத்தான் சொல்கிறேன்'' என்று குறிப்பிடுகிறாள்.

பீரிவர் கூரை மறுமனைச் சேர்ந்தல்கிக்
கூருகி ரெண்கி னிருங்கிளை கண்படுக்கு
நீரி லருஞ்சுர முன்னி யறியார்கொ
லீரமி னெஞ்சி னவர். — பாலை-34

இரவு நேரம் செல்லச் செல்ல, இதயத்திற்கோர் உறுதியை உண்டாக்கிக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தன் தலைவன் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேருகிறாள். அவனும் வருகிறான். இருவரும் இணைந்து இன்புற்று அவ்வழியைக் கடந்து செல்கின்றனர்.

பொழுது புலர்கிறது! நற்றாய் தன் நங்கையை எழுப்ப பின்புற அறைக்கு வருகிறாள். தன் மகளைக் காணாது ஓவென ஓலமிடுகிறாள். அக் குரலொலியைக் கேட்ட தோழியானவள் ஓடோடி வந்து உண்மையைச் சொல்கிறாள்.

அதற்கு அவள், ''என் அன்பிற்குகந்த மகளுக்கேற்ற தோழி! கொல்லும் அளவிற்குள்ள ஆண் யானையை ஒத்தவனோடு நடந்தே செல்லத் துணிவு பெற்

றுச் சென்றுள்ளாள்! அவளது காற்சிலம்பு அசையவும், கால் விரல்கள் சிவக்கவும், அவளை அவன் அழைத்துச் சென்றுள்ளான். போகும் வழியில் அவளென்ன கருதிக் கொண்டு செல்கிறளோ? பாதையைக் கடக்க முடியாமல் துன்புற்றுத் துன்புற்று எங்கெல்லாம் தங்கித் தங்கிச் செல்கிறளோ?'' எனக் கண்ணீர் வடித்தபடிக் கூறுகிறள். அவளோடு சேர்ந்து அன்னவளும் நீலிக் கண்ணீர் வடிக்கிறள்.

ஒல்லோமென் றேங்கி யுயங்கி யிருப்பளோ
கல்லிவ ரத்த மரிபெய் சிலம்பொலிப்பக்
கொல்களி றன்ஞன்பின் சொல்லுங்கொ லென்பேதை
மெல்விரல் சேப்ப நடந்து. —பாலை-42.

துன்பப் பாதையைக் கடந்து வந்த அந்த இருவரும் இன்பப் பாதையை அனுபவித்து அகமகிழ அவனது பெற்ருேர்கள் அவ்விருவருக்கும் திருமணம் செய்துவைக் கின்றனர். இருவரும் இன்பத்தின் எல்லையை அடைந்து, இல்லறத்தை மேற்கொண்டு நல்லறமோடு நடத்தி வரு கின்றனர்.

ஒரு நாள்! எதிர்பாராத வகையில் அவளை வளர்த்த செவிலித்தாய் வருகிறள். வந்தவளை வரவேற்று வேண்டிய அளவிற்கு உபசரித்து உவகையோடு வழிகூட்டி அனுப்பி வைக்கிறள்.

'சென்றவள் காணேமே!' என்ற நினைவில் இருக்கும் நற்ருயின் உள்ளத்தை களிப்புறச் செய்யும் வகையில் செவிலி வந்து நிற்கிறள்.

''என்ன......கண்டாயா, நம் செல்வத்தை!'' என்று கேட்கிறள்.

''கண்டேன்! அவளது அன்பு மகனையும் கண்டு களிப்புற்றேன்! பொய்கையிலேயுள்ள மலரிலே தேன் மணங் கமழவிருக்கும் மருதநிலத் தலைவனைத்தான் நம் மகள் மணம் செய்துகொண்டிருக்கிறள். நாமென்னவோ நினைத்து அன்னவனுக்குக் கொடுக்க அன்று மறுத்து விட்டோம். இன்றே, அவ்விருவரும் இன்பத்தோடு இன்பம் கலந்தால் இதயமானது எந்த அளவிற்கு ஆனந்த மடையுமோ அந்த அளவிற்கு அங்கு இருக்கிறர்கள்,

அழகிய கண்களைப் பெற்றுள்ள நம்முடைய மகளின் மகன் அவனது தந்தையை என்ன பாடு படுத்துகிறான், தெரியுமா? அதை நினைத்தாலே வேடிக்கையாக இருக்கிறது! தந்தையும் மகனும் எப்போதும் விளையாடிக் கொண்டே இருக்கின்றனர். நம்முடைய மகளும் அவர்களது விளையாட்டில் அவ்வப்போது கலந்து கொள்கிறாள். மகனைப் பெற்ற காரணத்தால் அவளது கொங்கைகள் சற்று நெகிழ்ந்துள்ளன. ஆனால் அதையும் விரும்பி, அவன் பாராட்டி, அக்கொங்கையின் கூர்மையை நெருடி அதிகமான இன்பத்தை அளிக்கிறானும்! இதை அவள் என்னிடத்தில் சொல்ல எவ்வளவு தயங்கினாள் தெரியுமா? எப்படியோ வெட்கமோடு எல்லாம் சொன்னாள். உன்னைப் பார்க்கப் பெரிதும் ஆவல் கொள்கிறாள். சென்று வா!'' என்று சொல்லுகிறாள். நற்றாயின் நல்லுள்ளம் அவ்விருவரையும் வாழ்த்தத் தொடங்குகிறது.

தேங்கமழ் பொய்கை யகவய லூரனைப்
பூங்கட் புதல்வன் மிதித்துழக்க—வீங்குத்
தளர்முலை பாராட்டி யென்னுடைய பாவை
வளர்முலைக் கண்ணுமுக்கு வார். —மருதம்-47.

இதுவரையில் 'ஐந்திணை எழுபது' என்னும் அழகிய நூலின்கண் உள்ள செழுமிய வெண்பாக்களைக் கொண்டு காதல் துறையும், அதனைச் சார்ந்துள்ள சில பகுதிகளையும் சுவைத்தோம். இங்ஙனம் சுவைக்கச் செய்த பெருமை மூவாதியார் என்னும் முதுபுலவருக்கே சாரும்.

இப்படிச் சங்க இலக்கியங்களாகக் கொள்ளப்படுகின்ற பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய நூல்களில் நிறைய காணலாம். அதோடு ஒரு மனிதன் வாழ்வதற்கும் தாழ்வதற்கும் அவனது மனமே என்பதைப் படம் பிடித்துக் காட்டும் புலவர் தம் புலமையை நினைத்துப் பார்த்தால் நிச்சயமாக நாம் பெருமைப்படக் கூடியவர்களே. அப்படிப் பெருமைப்பட்டுத்தான் பாரதியாரும், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' எனப் பாடிச் சென்றார். தனித்தனி நூல்களைப் போற்றுவதைக் காட்டிலும் தமிழைப் போற்றுவதையே பெரிதாகக்

கொண்ட காரணத்தால்தான் 'தமிழ்மொழிபோல்' என்று எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இதை, நாம் உணர்ந்தாகவேண்டும்.

இலக்கியம்—நமக்கோர் கலங்கரை விளக்கம்! வாழ்க்கைக்கேற்ற நற்பண்புகளை நனிசிறந்த முறையிலே நமது மூதாதையர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ளார்கள். எதற்காக—?

வாழ்விலே நல்வளம் பல பெற்று, தாழ்வான எண்ணத்தைத் தலை தூக்கவொட்டாமல் தமிழர் தம் குடும்பம் இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தால்தான் பாக்களாகப் புனைந்து, நாம் சுவைக்க வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். இன்று இன்பம் பெறுகிறோம். இதையே—இலக்கியங்கள் சொல்லுகின்ற நல்ல கருத்துக்களையே செயல் முறையிலும் பயன்படுத்தப் புகுந்தால் இன்பத்துள் இன்பமாகத் திகழும். இது உறுதி.

அவ்விதச் செயல்முறையில் நாம் செல்லாத காரணத்தால்தான் மற்றைய நாட்டோடு நம் நாட்டையும் ஒப்பிட்டுப் பேசுவதற்குச் சற்றுத் தயங்குகிறோம். இந்நாளில் பிற நாடுகளெல்லாம் எவ்வளவோ துரிதமாகத் தம் பணியைச் செய்துகொண்டு செல்வதை நாம் பார்க்கிறோம். பார்க்கின்ற மாத்திரத்தில் ஏற்படுகின்ற அந்த உணர்வு ஊக்கத்திற்கும் ஆக்க வேலைகளுக்கும் பயன்பட்டிருக்குமானால் தயங்குவது நாமாக இருக்க முடியாது.

ஒரு காலத்தில் பெருமையோடு வாழ்ந்தவர்கள் தான்! உரிமையோடு உதவியவர்கள்தான்! எந்த நாடுமே இலக்கியங்களைப் படைக்காத நேரத்தில் எண்ணற்ற நூல்களைப் படைத்துப் பல்லோரும் பகுத்துணர வழி காட்டியவர்கள்தான். இன்றோ?

தேய்ந்து கிடக்கிறோம்! வாழ்வாங்கு வாழ வகை வகையான நூல்கள் வழி வகுத்தும் பயன்படுத்தாமல் இருக்கிறோம். இனியும் இந்நிலை வேண்டியதுதானா?

எண்ணிப் பாருங்கள்! அப்போதுதான் நாம்—நம் குறையை உணர இயலும். குறையை உணரும் நேரத்தில் தான் விரைவாக நாட்டுக்குத் தேவையான நல்ல செயல்களைச் செய்ய முடியும். எதற்கும் விழிப்பு அவசியம்.

எவனொருவன் விழிப்போடு இருக்கிறானோ அவனே வளம் பல பெற்று வாழ்கிறான்.

எந்த நாடு, தம் கடந்த காலக் கருவூலங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டு இருக்கிறதோ அந்த நாடு என்றும் வீழ்ந்து விடுவதில்லை.

இலக்கியம்—ஒரு கலங்கரை விளக்கம். அந்தக் கலங்கரை விளக்கத்தை நோக்கி வருகின்ற எந்தக் கப்பலும் கரை வந்து சேராமல் இருந்ததில்லை. இலக்கியமும் அத்தகையதுதான்.

இலக்கியச் செல்வத்தை, அந்த இன்பக் குவியலைப் பாதுகாத்து வந்த நாம், பயன்படுத்தவும் தெரிந்துகொள்ளுதல் மிகமிக அவசியமாகும். அங்ஙனம் அறிந்து ஆக்க வேலைகளில் ஈடுபட்டால் இன்பம் பொங்கும்; அன்பு மலரும்; பண்பு ஓங்கும்! குடும்பம், குடும்பமாகத் துலங்கும், எதற்கும் ஊக்கம் தேவை.

ஊக்கத்தால்தான் பிறநாடுகளனைத்தும் மேல் நோக்கிச் சென்றுகொண்டு இருக்கின்றதென்பதை உணருதல் வேண்டும்.

ஒரு மனிதனிடம் ஊக்கம்மட்டும் இருக்குமானால் அவன் என்றுமே வீழ்வதில்லை. வாழ்வும் தாழ்வும் ஊக்கத்தைப்பொறுத்துத்தான் அமைகின்றதென்பது. அறிய வேண்டியவற்றுள் ஒன்றாகும். எனவே வீடானாலும் நாடானாலும் ஊக்கத்தைப் பொறுத்த அளவிலேதான் சீராகவும் சிறப்பாகவும் அமைகிறதென்பதை அறிந்து ஆக்க வேலைகளில் ஈடுபட முன்வரவேண்டும். அதுவே இன்பம்!

இன்றையத் தினம் பெரும்பாலான இல்லத்தில் இன்பம் காண முடியாத அளவிலே இருக்கின்றன. காரணம் பண்டையத் தமிழர் தம் பண்பிற்கேற்ப செயல்கள் குறைந்ததால்தான். அதற்குக் காரணமில்லாமலில்லை. நாம்—நம்முடைய செந்தமிழ்ச் செல்வங்களை—அறிவுக் களஞ்சியங்களை அறியாமல் இருந்ததால்தான். இன்று அப்படியில்லை.

இலக்கியமெல்லாம் சமுதாயத்தின்கண் ஊடாடத் தொடங்கிவிட்டது. ஆராய்ச்சி மன்றங்கள், ஆங்காங்கே

இயங்கத் தொடங்கிவிட்டன. வாழ்வுப் பாதைக்கும்—வளமுள்ள நாட்டைத் தோற்றுவிப்பதற்கும் பல பெரியோர்கள் முன்வந்துவிட்டனர். எனவே, இனியாகிலும் இலக்கியத்திலுள்ள ஒவ்வொரு நல்ல கருத்துக்களையும் இதயத்திலே பதியவைத்துக்கொண்டு போரும் பிணக்குமின்றி வாழ முன்வர வேண்டும். அப்போதுதான் சீரழிந்து கிடக்கும் நம்முடைய சமுதாயம் செழிப்படைய முடியும். இலக்கிய இன்பத்தை நுகரத் தொடங்கி விட்டால் இல்லத்தில் மட்டுமல்ல, நாட்டிலேயும் இன்பம் தான்!

காணுகின்ற இடமெல்லாம் கலைத்தோட்டம்தான்! பார்க்கின்ற இடமெல்லாம் பொன்னொளிதான். அதன் பிறகும் குறையேது?

அந்தச் சொல்லுக்கே இடமிருக்காது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த வாழ்வுதான் நம்மிடையே அணி செய்யும். அந்தக் காலத்தை மீண்டும் பெறுவதற்கு வழிகாட்டுவது, பண்டையத் தமிழிலக்கியம் ஒன்றேதான். அதனுல்தான் நம்முடைய முன்னோர்கள் 'இலக்கியம்' என்றதொரு விழுமிய சொல்லிற்கு 'இன்பம்' என்றதொரு சொல்லையும் தோற்றுவித்துச் சென்றூர்கள். மனிதனுக்குக் கண்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது, ஒரு நாட்டிற்கு இலக்கியமும். அத்தகைய இலக்கியங்களில் நுழையுங்கள். இன்பத்துள் இன்பம் பெற்று இன்புற வாழ இன்றைய நாளிலிருந்து உறுதி கொள்ளுங்கள். அன்றைய நாளில் நாம் பெற்ற இன்பத்தை, இன்றைய நாளில் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இன்பம் பெறுங்கள். அவ்வின்பத்திற் கீடாக வேறு எந்த இன்பமும் இல்லை. எனவே, இலக்கியமென்ற இன்பச் செல்வியின்மீது பற்றுதல் பிறக்கட்டும். இவ்வளவு ஏன்? சற்று வெளிப்படையாகவே சொல்லி விடுகிறேன். ஒருவிதக் காதலே பிறக்கட்டும்; வளரட்டும்; பெறவேண்டிய செல்வத்தைப் பெற்று ஓங்கட்டும்! இன்பக் கடலில் மூழ்கி விளையாடுங்கள்! அதன் பிறகு பாருங்களேன். ஒரே இன்பந்தான்!

MADURAI UNIVERSITY LIBRARY